50 Rs

விதைகள்

VOL -3 ISSUE -28

DECEMBER 2023

சகல ஜாதிகளையும் இரும்புக்கோலால் ஆளுகைசெய்யும் **ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்;** அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது. வெளி 12 :5

NALLA NILAMAGU NANBA MINISTRIES TRUST

சந்தோஷ்
கோயம்புத்தூர்

முள்ளில் பூத்த ரோஜா
சேற்றில் வளரும் தாமரை
கடல் ஆழத்தில் கிடைக்கும் முத்து
பூமிக்கடியில் விளையும் வைரம்
வான் உச்சியில் ஜொலிக்கும் விண்மீன்
இவையெல்லாம் என்ன அழகு???
இயேசு வாழ விரும்பும்
உன் இதயமே கொள்ளை அழகு!!!
அவர் பிறக்க நீ சிறக்க உன் இதயம் கொடு.!!!

வெளியீடு

நல்ல நிலமாகு நண்பா
மினிஸ்ட்ரீஸ் டிரஸ்ட்
பதிவு எண் 52 /2023

ஆசிரியர்

சு. மெர்லின்

இணை ஆசிரியர்

ஜெ. ஜாண் டேனியல்

மலர்க்குழு

S.மெர்லின்
K.S பிரசன்னா மெர்லின்
J.ஜாண் டேனியேல்
Dr.அரவிந்த் ஜெயக்குமார்
J.ஜாக்குலின் ஷைன்
ஹில்டா பாக்கியராஜ்

வடிவமைப்பு

சு.மெர்லின்

தொடர்புக்கு.

நல்ல நிலமாகு நண்பா
மினிஸ்ட்ரீஸ் டிரஸ்ட்,
16/76 வெட்டுக்காட்டுவிளை,
கண்ணனூர் - 629158,
கன்னியாகுமரி மாவட்டம்,
தமிழ்நாடு,
இந்தியா.
தொடர்பு +918668047378

புலனம்(whatsapp)

+918668047378

மின்னஞ்சல்(email)

nallanilamagunanbaministries@gmail.com

விலை.

50

வருட சந்தா

600

இதில் வரும் வசனங்களுக்கு , பவர் மொழிபெயர்ப்பு மற்றும் பொது மொழிபெயர்ப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது

உள்ளே

இயேசு தந்த இரட்சிப்பு என்ன ஆயிற்று?

பத்து ஆண்டு இருபது ஆண்டு அல்ல , நூற்றுக்கணக்கான ஆண்டுகள் யூத மக்கள் ஏக்கத்துடனே வாழ்ந்து வந்தனர்.

கிறிஸ்துவின் பிறப்பு என்பது கிறிஸ்து நமது உள்ளத்தில் வாசம் பண்ண விரும்பி வந்த நிகழ்வு. கிருபையும் உண்மையும் நிறைந்தவராய் நமக்குள் வாசம்பண்ண வந்திருக்கும் அவரை ஆளுகை செய்ய நாம் அனுமதிக்கவேண்டும்.

தமக்குத் தகுதியில்லாத அளவுக்கு ஒருவர் நம்மைப் புகழ்ந்தால் நாம் பயப்பட வேண்டும்

52 பக்கங்கள்

இன்னும் பல தலைப்புகள்... ... ...

விலையுயர்ந்த துணிகள் எடுத்தவர்கள்கூட இவளின் மகிழ்ச்சியை அவர்களின் பணத்தால் விலை கொடுத்து வாங்க முடியவில்லை.

ஆசிரியர் வரிகள்

வாசகர்கள் அனைவருக்கும் ‘கிறிஸ்துபிறப்பு மற்றும் புத்தாண்டு’ நல்வாழ்த்துக்களைக் கூறிக்கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

‘கிறிஸ்மஸ்’ என்பது இயேசுவை நாம் சந்திப்பதின் அடையாளமாகும். மேய்ப்பர்கள், சாஸ்திரிகள் குழந்தை இயேசுவைச் சந்தித்து மகிழ்ந்தது போல, நாமும் இப்பண்டிகைக் காலங்களில் கிறிஸ்துவைச் சந்திப்பதே கிறிஸ்மஸ்-ன் வெற்றியாய் அமையும். ஏதேன் தோட்டத்தில் பாவம் வருவதற்கு முன், மனிதர்களை நேரடியாக சந்தித்த ஆண்டவர், சில ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின், மீண்டும் மனிதர்களை நேரடியாகச் சந்திக்க ‘இயேசு’ என்னும் மனுஷகுமாரனாய் வந்துதித்தார்.

நம்மைத் தேடி வந்தவரை நாம் சந்திக்க மறந்தால் அது எவ்வளவு பெரிய அவமரியாதை. நாம் இறைவனைச் சந்திக்கும் இடம் தனி அறை ஆகும். ஜெபமும் தியானமுமே நமக்கும் அவருக்கும் உள்ள உரையாடல் ஆகும். இப்படிப்பட்ட சந்திப்பை அனுதினமும் வளர்த்துக் கொள்ளுவதே கிறிஸ்மஸ்.

புதிய ஆண்டு என்பது, நமக்கு மீண்டும் கொடுக்கப்படுகின்ற கிருபையின் ஆண்டாகும்! அது ஆண்டவர் நம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. இந்த ஆண்டிலாவது இவர்கள் “மனம் திரும்புவார்கள் / தவறை உணர்வார்கள் / நன்மை செய்வார்கள் / நற்செய்திக்காய் புறப்படுவார்கள் / சிலுவை சுமப்பார்கள்” என்ற நம்பிக்கையே அது. ஆண்டவரை மீண்டும் ஏமாற்றாதீர்கள்.

‘விதைகள்’ அச்சடிக்கப்பட்ட பத்திரிகை 2 மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடலாம் என முடிவு செய்திருக்கிறோம். நீங்கள் ‘ரூ **50** ’ செலுத்தி ஒவ்வொரு இரண்டு மாதத்திற்கும் ஒரு புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளலாம், அல்லது ‘ரூ **600** ’ செலுத்தி தொடர்ந்து வெளியிடும் 12 புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விதைகள் புத்தகத்தை வாங்குவது எப்படி என்கிற தெளிவான விவரங்கள் 45 -ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்களுக்காக ‘ஜெபியுங்கள் நன்கொடைகளாலும் உதவுங்கள்’. ஆண்டவர்தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்துக் காப்பாராக!

Bro. **மெர்லின்**

ஆசிரியர் – விதைகள்.

‘விதைகள்’ பத்திரிகை பற்றிய கருத்துக்களை,
ஆலோசனைகளை சில வரிகளில்
எங்களுக்கு அனுப்புங்கள்....
சிறந்த கருத்துக்கள் அடுத்த இதழில்
வெளிவரும்

+91 86680 47378



கிறிஸ்துவின் பிறப்பிடமான பெத்லகேம், ஜெருசலேமுக்கு தெற்கே ஆறு மைல் தொலைவில் உள்ள ஒரு சிறிய நகரம். “பெத்லகேம்” என்ற வார்த்தை “**அப்பத்தின் வீடு**” என்பதைக் குறிக்கிறது . இது எப்பிராத்தா [Ephrata] என்றும் அழைக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் இது அதிகமான இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதியாகமம் 35:19, ரூத் 4:11, சங்கீதம் 132:6. இது “தாவீதின் நகரம்” என்று அழைக்கப்பட்டது [லூக்கா 2:5] ஏனெனில் இது தாவீதின் பிறப்பின் நகரம் [1 சாமுவேல் 16:1, 1 சாமுவேல் 16:18. யோசுவா 19:15]. கலிலேயாவிலும் பெத்லகேம் என்கின்ற நகரம் உண்டு; அதிலிருந்து வேறுபடுத்துவதற்காகவே இது யூதேயாவின் பெத்லகேம் என்று அழைக்கப்பட்டது. பெத்லகேமின் மண் அதன் வளத்திற்கு குறிப்பிடத்தக்கது. இந்த நகரம் மலைகள் மற்றும் பள்ளத்தாக்குகளுக்கு நடுவில் அமைந்துள்ளது. பெத்லகேமுக்கு கிழக்கே சுமார் 200 அடிகள் தொலைவில் நமது இரட்சகர் பிறந்ததாகக் கூறப்படும் இடம் காட்டப்பட்டுள்ளது. அங்கே ஒரு தேவாலயம் மற்றும் ஒரு கான்வென்ட் உள்ளது; தேவாலயத்தின் அடியில் ஒரு நிலத்தடி தேவாலயம் உள்ளது, இது 32 விளக்குகளால் ஒளிரப்படுகிறது, இது இயேசு பிறந்த முன்னணை இருந்த இடம் என்று கூறப்படுகிறது.

எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; மீகா–5:2

புதிய ஏற்பாட்டின் முதல் வாக்குத்தத்தம்

மத்தேயு 1:21

அவர் (இயேசு) தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்

ஜாண் டேனியல்
கொற்றியோடு

கிறிஸ்து இயேசுவின் பிறப்பின்போது அவரைக் குறித்துக் கர்த்தருடைய தூதன் அறிவித்த செய்தி இது: ‘அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்’

இயேசுகிறிஸ்துவைப் பாவங் களை மன்னிக்கிறவராக அறிந்திருக்கு மளவு, அவர் பாவத்திலிருந்து நம்மை இரட்சிக்கிறவராக அறிந்திருக்கிறோமா? என்பது ஒரு பெரும் கேள்வி. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இயேசுவை மன்னிக்கிறவராக மட்டுமே அறிந்திருக்கக் காரணம், அவர்கள் இயேசுகிறிஸ்துவால் கிடைக்கும் இரட் சிப்பை இன்னும் முழுமையாக சுவைக்காத படியால்தான்.

‘மாமிசத்தினாலே (ஊனியல்பினாலே) பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் மண்ணுக்கு அனுப்பினார்’(ரோமர்.8:3) என்று அப்போஸ் தலர் பவுல் சொல்லுகிறார்.

நியாயப்பிரமாணம் ஏன் பலவீனமாய் இருந்தது? ஏனென்றால் மனித மனம் நியாயப்பிரமாணம் நல்லது என்று ஒத்துக்கொண்டாலும்; நியாயப் பிரமாணத்தின்படி நடப்பதற்கு முடியாதபடி மனித ஊனியல்பு மனிதரைப் பின்னோக்கி இழுக்கிறது. இதுதான் நியாயப்பிரமாண யுகத்திலே வாழ்ந்த மனிதரின் நிர்ப்பந்தமான நிலை. இதனைத்தான் அப். பவுல் ரோமர் 7:23,24 ஆகிய வசனங்களில் விளக்கிக் கூறுகிறார். ‘என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்

பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது. நிர்ப்பந்தமான மனுஷன் நான்; இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?'

நியாயப்பிரமாணத்துக்கும் மனித ஊனியல் புக்கும் இடையே நடைபெறும் இந்த இழுவைப் போராட்டத்தில் மனிதன் வென்று மேற்செல் வதற்காகத்தான் இயேசு பாவமாம்சத்தின் சாயலாக இந்த மண்ணுக்கு வந்தார். இயேசுவின் வருகை பாவத்திற்கு முடிவுகட்டியது என்று ரோமர்.8:3 (திருவிவிலியம்) கூறுகிறது.

இயேசு பாவங்களை மன்னிக்கிற வர்தான்; ஆனால் பாவங்களை மன்னிக்கிறவர் மட்டுமல்ல, அவர் பாவங்களிலிருந்து நம்மை மீட்பவரு மாவார். அதாவது நமது பாவங்களுக்கு முடிவுகட்டுபவருமாவார். ஆனால் நாமோ பாவம் செய்வதும் மன்னிப்பைப் பெறுவதும், மீண்டும் பாவம், மீண்டும் மன்னிப்பு என்றே வாழ்கிறோம்; இது அல்ல கிறிஸ்து நம்மில் எதிர்பார்க்கும் வாழ்வு. நம்மில் இருக்கின்ற எந்தெந்த பாவங்களைக் காணும்படியான வெளி ச்சம் நமக்குக் கிடைக்கிறதோ, அவற்றுக் கான மன்னிப்பைப் பெறுவதோடு நிறுத்தி விடாமல், அந்தப் பாவம் மீண்டும் நம்மை மேற்கொள்ளாதிருக்க பரிசுத்த ஆவியரின் உதவியைத் தேடி, வெற்றிபெற வேண்டும்.

பாவங்களை வென்று மேற் கொண்டு, நாளுக்கு நாள் பரிசுத்தத்தில் வளருகின்ற வாழ்க்கை சாத்தியமா எனக் கேட்டால், நிச்சயமாக சாத்தியமே. அதற்காகத்தான் இயேசு இந்த மண்ணுக்கு வந்தார். இயேசு நமது பாவங்களிலிருந்து நம்மை மீட்கிறவர், இரட்சிக்கிறவர். அதனால்தான் அவருக்கு இயேசு என்று பெயரிடும்படி கூறப்பட்டது.

நாம் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டி ராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் நம்மை மேற்கொள்ளாது என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார் (ரோமர்.6:14).

தேவ அன்பின்மை, சகோதர அன்பின்மை, இச்சை, கோபம், எரிச்சல், பொறாமை, திருப்தியின்மை, கட்டுப் பாடற்ற நாவு, பெருமை, பண ஆசை, உலக நேசம், முதலிய பாவங்களை மேற்கொள்ள முடியாது என்ற நிலை நம்மில் இருந்தால் இன்னும் நாம் கிருபை யுகத்தின் பிள்ளைகளாக இல்லாமல் நியாயப்பிரமாண யுகத்திலேயே இருக்கிறோம் என்று அர்த்தமாகும். நியாயப்பிரமாணம் பழைய ஏற்பாடு. கிருபையோ புதிய ஏற்பாடு. நாம் புதிய ஏற்பட்டில் வாழுகிறோம். எனவே நாளுக்கு நாள் பரிசுத்தத்தில் வளர வேண்டும்.

சற்றே சிந்தித்துப் பார்ப்போம்; கடந்த ஆண்டில் உங்களை வீழ்த்திய அதே பாவம் இந்த ஆண்டிலும் உங்களை அதே வேகத்தில் வீழ்த்துகிறதா? வீழ்த்துகிறதென்றால் நீங்கள் இன்னும் கடந்த ஆண்டில் இருந்த அதே வகுப்பில்தான் இருக்கிறீர்கள் என்றுதானே பொருள்? இது வளர்ச்சியல்ல; வீழ்ச்சி. அப்படியானால் இயேசு தந்த இரட்சிப்பு என்ன ஆயிற்று?

தடுமாற்றங்களும் வீழ்ச்சிகளும் வாழ்க்கையில் அவ்வப்போது ஏற்பட்டாலும், கர்த்தரிடம் மன்னிப்பைப் பெற்று, மீண்டும் எழுந்து, நாளுக்கு நாள் பாவங்களை மேற்கொள்ளும் பரிசுத்த வாழ்வில் படிப்படியாக முன்னேற வேண்டும். அதற்காகத்தான் இயேசுகிறிஸ்து மண்ணுக்கு வந்தார். அதற்காகத்தான் தமது தூய ஆவியரை நமக்குத் தந்தார்.

பரிசுத்தத்தில் வளரும் வாழ்வு எப்பொழுது சாத்தியமாகும்?

பரிசுத்த வாழ்வின் மேல் தீராத தாகமும், இடைவிடாத முயற்சியும், கிறிஸ்துவின் ஜேுள்ள விசுவாசமும் இருந்தால் தமது தூய ஆவியரின் உதவியைத் தந்து நமது பாவங்களிலிருந்து நம்மை இயேசு மீட்பார். கிறிஸ்தவர்களில் பலர் பரிசுத்த வாழ்வில் ஆர்வம் காட்டுவதில்லை; நமது திருச்சபைகள் பெரும்பாலும் பாடல் பாடுவதிலும், ஆராதனை நடத்துவதிலும், போட்டிகள் வைப்பதிலும், பரிசுகள் பெறுவதிலும், பாரம்பரிய ஆசரிப்புகளில் ஆனந்தமடை வதிலும், திருப்தியடைந்து விடுகின்றன. இவைகள் எல்லாம் வேதபாரகர் பரிசேயர் என்பவர்களின் நீதிகள். மத்தேயு 5:20ல்

இயேசு சொன்னார்: 'வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாய் இராவிட்டால் பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்' என்று. பரிசுத்தத்தில் வளருவோம், முன்னேறுவோம். முன்னேறாதிருப்பது பின்வாங்குதலே.

புதிய ஏற்பாட்டின் முதல் வாக்குத்தத்தமே இந்த வார்த்தைகள்தாம் 'அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்' (மத்தேயு.1:21)

'ஆமென், ஆண்டவரே, எங்கள் பாவங்களை நீக்கி எங்களை இரட்சியும்.'

இயேசு பிறந்த இடம் ஒரு குன்றின் சரிவில் இருந்த குகைகளில் ஒன்று, வழிப்போக்கர்கள் தங்கும் பொருட்டு இந்தக் குகைகள் பயன்பட்டு வந்தன. மேய்ப்பர்களும் தங்கள் கால்நடைகளுடன் சென்று இந்தக் குகைகளில் ஓய்வு எடுத்துக் கொள்வது உண்டு. இப்படிப்பட்ட குகை தொழுவம் ஒன்று காலியாக இருந்ததில்தான் யோசேப்பும் மரியாளும் தங்கினார்கள்.

கூடுதல் அறிய...

யூதக் குடும்பங்களில் ஆண் குழந்தை பிறந்தால், பிறந்த எட்டாவது நாளன்று, அந்தக் குழந்தைக்கு விருத்த சேதனம் செய்வார்கள்; பிறகு பெயர் வைப்பார்கள்.

இந்த இரு சடங்குகளுக்கும் குருமார்களோ வேறு யாருமோ வர வேண்டும் என்பது இல்லை. வீட்டிலுள்ளவர்களே இந்த இரு சடங்குகளையும், முடித்துக்கொள்வார்கள். இந்த முறையை அனுசரித்து மேரிக்குப் பிறந்த தெய்வீகக் குழந்தைக்கும் எட்டாவது நாளன்று விருத்தசேதனம் செய்தார்கள்; அதன் பின், "இயேசு" என்று குழந்தைக்குப் பெயர் வைத்தார்கள்.

ஆண் குழந்தையைப் பெற்றால், குழந்தையைப் பெற்ற தாய்க்கு நாற்பது நாட்கள்வரை தீட்டு உண்டு என்றும், பெண் குழந்தையைப் பெற்றால், எண்பது நாட்கள்வரை தீட்டு உண்டு என்றும், யூதர்கள் நம்பினார்கள். குறிப்பிட்ட தீட்டுக் காலம் முடியும்வரை, குழந்தையை ஈன்ற தாய், புனிதமான எந்தப் பொருளையும் தொடக்கூடாது. கோயிலின் கருவறைக்குள் நுழையக் கூடாது என்பது யூதர்களின் நடைமுறைச் சம்பிரதாய மாகும்.

நாற்பது நாட்கள் கழிந்து தீட்டு நீங்கியதும், யூதர்களின் சம்பிரதாயப்படி குழந்தை இயேசுவைத் தூக்கிக் கொண்டும், கோயிலுக்குச் செலுத்த வேண்டிய காணிக்கைப் பொருளை எடுத்துக்கொண்டும், மேரியும், யோசேப்பும் பெத்தலேகமிலிருந்து, ஆறு கல் தொலைவிலுள்ள ஜெருசலம் நகருக்குப் போனார்கள். தலைச்சன் குழந்தை ஆண் குழந்தையாய் இருந்தால், அந்தக் குழந்தையை ஆலயத்துக்கு அர்ப்பணித்துவிட வேண்டும் என்று யூதர்களின் சட்டம் கூறிற்று. அப்படி அர்ப்பணிக்கும் குழந்தையை, ஐந்து ஷேக்கல் கோவிலுக்குக் காணிக்கை செலுத்திவிட்டுத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்ற வழக்கமும் இருந்தது.

இந்தப் வழக்கப்படி குழந்தையைக் கோயிலுக்கு அர்ப்பணித்து, பிறகு காணிக்கை செலுத்திக் குழந்தையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவும், தீட்டு நாட்கள் கழிந்த பின், தன்னைப் புனிதப்படுத்திக்கொள்ளவும், மேரியும் யோசேப்பும் ஜெருசலத்துக்குப் போனார்கள்.

தாய்மார்கள் இப்படி தேவாலயத்துக்கு வரும்பொழுது, பணக்காரர்களாய் இருப்பின், சிறு ஆட்டுக்குட்டி ஒன்றைக் கொண்டுவந்து தகனபலி

கொடுப்பார்கள். ஏழைகளாய் இருந்தால், இரண்டு மாடப் புறாக்களைக் கொண்டுவந்து தகனபலி கொடுப்பார்கள்.

யோசேப்பும் மேரியும் ஏழைகளாய் இருந்ததால். இரண்டு மாடப்புறாக்களை மட்டும் எடுத்துக்கொண்டு வந்தார்கள்.

(எ.எல் நடராஜன் அவர்கள் எழுதிய இயேசுநாதர் வாழ்க்கை வரலாறு என்ற புத்தகத்திலிருந்து)

மேசியா வரமாட்டாரா?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர். பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூத மக்கள் அரசியல் துறையிலும் சரி, பொருளாதாரத் துறையிலும் சரி, பின்தங்கி, பெரிதும் அவதிப்பட்டார்கள். ரோமானியர்கள் பாலஸ்தீன யூதர்களை அடக்கி ஆண்டு அதிகாரம் செலுத்தினார்கள். கிரேக்கர்கள் வாணிபத்துறையில் முன்னேறி, யூதர்களை பொருளாதர துறையில் நசுக்கினார்கள், மேல்நிலையிலும் மற்றும் குருமார்களாயும் இருக்கும் யூதர்கள், ரோம அதிகாரிகளுடன் சேர்ந்துகொண்டு தங்கள் இனத்தவர்களையே வஞ்சித்து வாழ்க்கை நடத்தினார்கள். எனவே சமயத்துறையிலும் அவர்கள் யூத குருக்களுக்கு அடிமையாக வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டது

இதனால் நாடு செழிப்பாய் இருந்தும், யூ த மக்கள் நல்ல முறையில் வாழ முடியவில்லை. ஆக்கமும், ஊக்கமும் இழந்து அவதிப்பட்டார்கள். தங்களுக்கு விடிவுகாலம் இல்லையா? தாங்கள் எதிர்பார்த்த மீட்பர், தங்களிடையே அவதரித்து இந்தக் கொடியவர்களின் பிடியிலிருந்து தங்களை விடுவிக்க மாட்டாரோ என ஏங்கினார்கள்.

அரசியலில் அவதிப்பட்டவர்கள், பெரிய அரசியல் தலைவர் ஒருவர் தங்களிடையே தோன்றி தங்களுக்கு விடுதலை தேடித் தருவார் என்று ஆவலோடு அவரை எதிர்பார்த்திருந்தனர். பொருளாதாரத் துறையில் சிக்கி முன்னேற வழி தெரியாது தவி த்தவர்கள் அந்தத் துறையில் தங்களுக்கு விமோசனம் ஏற்பட ஒரு தலைவர் தங்களிடையே தோன்றி. தங்களை உய்விக்க மாட்டாரா என்ற ஏக்கத்துடனே இருந்தனர். மற்றும் சிலர் தங்களிடையே தீர்க்கதரிசி ஒருவர் தோன்றி, சமயத்துறையில் தங்களுக்கு வழிகாட்டுவார் என்றும், அவர் சொற்படி நடந்தால், சகல துறைகளிலும் முன்னேற முடியும் என்றும் நம்பி வாழ்க்கை நடத்தி வந்தனர்

பத்து ஆண்டு, இருபது ஆண்டு அல்ல, நூற்றுக்கணக்கான ஆண்டுகள் யூத மக்கள் இத்தகையை ஏக்கத்துடனே வாழ்ந்து வந்தனர். இப்படிப்பட்ட சூழலில்தான் மேசியாவாம் இயேசு பாலஸ்தீனாவில் பிறக்கிறார்.

சேவியர்
சென்னை

மீட்பின் திட்டத்தில் மரியாளின் பங்கு !

உருவில்லா வொருவனைத் தன் னுலகிலொரு மகனாக்கிக்
கருவில்லாக் கருத்தாங்கிக் கன்னித்தா யாயினையே

கிறிஸ்தவர்களால் மறக்க முடியாத நபரான வீரமாமுனிவர், "திருக்காவலூர் கலம்பகத்தில்" அன்னை மரியாளைப் பற்றி எழுதிய வரிகள் இவை.

கடவுளுடைய மீட்பின் திட்டத்தில் மரியாளின் பங்கு மிக மிக முக்கியமானது. அதன் வேர்களை விசாரித்தால் அது ஆதியாகமத்தில் சென்று நிறைவடையும்.

ஆதாமும், ஏவாளும் ஏதேனிலுள்ள தோட்டத்தில் வாழ்கிறார்கள். பாம்பு அவர்களைச் சோதிக்கிறது. அவர்கள் தவறிழைக்கிறார்கள். கடவுளின் வார்த்தையை விட பாம்பின் வார்த்தை நல்லது என ஏவாள் நினைக்கிறாள். கடவுளின் வார்த்தையை விட மனைவியின் வார்த்தையைக் கேட்பதே நல்லது என ஆதாம் நினைக்கிறார். இருவரும் பாவத்தில் விழுகிறார்கள். பாவம் பூமியின் மேல் ஒரு நிழலைப் போல படரத் தொடங்குகிறது. பாவத்தின் விதையை பூமியில் ஆதிப் பெற்றோர் விதைக்கிறார்கள்.

அப்போது கடவுள் பாம்பிடம், "உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள்

HAPPY NEWYEAR

வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப் படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்" - என்கிறார். அன்றைக்குப் பெண்ணின் வித்து சாத்தானின் தலையை நசுக்கும் என கடவுள் முடிவெடுத்த கணத்திலேயே மரியாள் தேர்ந்தெடுக்கப்படுகிறாள்.

காலங்களுக்கு முன்பே நம்மை அறிந்தவர். கருவாகும் முன்பே நம்மைத் தெரிந்தவர். நமது தலைமயிர்களைக் கூட எண்ணி வைத்திருப்பவர் கடவுள் என்றால், காலங்கள் தாண்டி தனது மகனை மண்ணில் அறிமுகம் செய்து வைக்கப் போவது மரியாள் என்பதை மட்டும் அறியாமல் இருப்பாரா? அவர் அறியாமல் இருந்தார் என யோசிப்பதே கடவுளுடைய மீட்பின் திட்டத்தை சந்தேகப்படுவதாகிவிடும். 'கன்னி கருத் தாங்கி மகனைப் பெற்றெடுப்பார்' (மத்:1.23) எனும் தீர்க்கத்தரிசனம் வழியாக கடவுள் தனது திட்டத்தை வெளிப்படுத்துகிறார்.

இயேசு உலகிற்குப் போக வேண்டும், போகும் காலத்தில் அங்கே இருக்கும் நல்ல பெண்களைப் பார்த்து, அதில் ஒரு கன்னிப்பெண் வழியாய் இயேசுவை அனுப்ப வேண்டும் என கடவுள் நினைத்திருக்க வாய்ப்பில்லை. இயேசுவின் வம்சாவளிப் பட்டியலைப் பார்த்தால் அதில் ஒவ்வொரு நபரையும் கடவுள் மிக மிகக் கவனமாகத் தேர்ந் தெடுத்திருக்கிறார் என்பது புலனாகும். அது நமக்கு வியப்பையும், அதிர்ச்சி யையும் கூட தரும். பாவிகளும், பிற இனப் பெண்களும், ஒதுக்கப்பட்டவர் களும் எல்லோரும் இருக்கிறார்கள் அந்த வம்சாவளிப் பட்டியலில். அப்படிப்பட்ட ஒரு பட்டியலில் வந்தால்தான் இயேசு கடையனில் கடையனாக வரமுடியும்! கடையனில் கடையனாக வந்தால்தான், மற்ற எல்லா மக்களுக்கும் முன்மாதிரி கையான வாழ்க்கையை அவர் வாழ முடியும். அப்படி வாழ்ந்துதான் அவர் மேன்மையின் உச்சத்தை அடைந்தார்.

மரியாவைக் கடவுள் தேர்ந்தெடுத்தது ஆதாம் - ஏவாள் பாவம் செய்த காலத்தில் அல்ல! லூசிபர் கடவுளோடு

> **பாவிகளும்,**
> **பிற இனப் பெண்களும்,**
> **ஒதுக்கப்பட்டவர்களும் என**
> **எல்லோரும் இருக்கிறார்கள்**
> **இயேசுவின் வம்சாவளிப்**
> **பட்டியலில்!**

சண்டையிட்ட காலத்திலேயே, பாவம் விண்ணகத்தில் நுழைந்த காலத்திலேயே கடவுள் மீட்பின் திட்டத்தை வரைந்துவிட்டார் என சில இறையியலார்கள் சொல்வதுண்டு. அப்படியெனில் மண்ணுலகில் மனிதன் படைக்கப்படும் முன்பே, மீட்பின் திட்டத்தை அவர் வரைந்த நாட்களிலேயே, கடவுளுடைய மனதில் மரியாள் இருந்தார்! மீட்பின் திட்டத்தில் அவர் இணைந்திருந்தார்.

மரியாளுடைய வாழ்க்கை – திருமறை தாண்டிய நூல்கள் பார்வையில்.

மரியாளுடைய மழலைக் கால வாழ்க்கையை விவிலியம் பதிவு செய்யவில்லை. ஆனால் புற நூல்கள் பலவற்றில் மரியாளின் சிறுவயது வாழ்க்கையைக் குறித்த பல பதிவுகள் காணப்படுகின்றன. குறிப்பாக யாக்கோபு எழுதிய நற்செய்தி, மரியாளின் நற்செய்தி போன்ற நூல்களில் மரியாள் குறித்த பல சுவாரஸ்யமான செய்திகள் காணக் கிடைக்கின்றன.

அதன்படி, மரியாளின் அன்னை 'அன்னா'. தந்தை 'யோவாக்கிம்.' அன்னாவுக்கு குழந்தைகள் இல்லை, எனவே அவர்கள் கடவுளிடம் இடைவிடாமல் வேண்டிக்கொண்டே இருந்தார்கள். தனக்கு ஒரு குழந்தை கிடைத்தால் அந்தக் குழந்தையை ஆலயத்தில் அர்ப்பணிப் பேன் என அன்னை நேர்ச்சை செய்தார். கடவுளின் அருள் அவர்களுக்குக் கிடைத்தது. அன்னா கர்ப்பவதியானாள், மரியாளை ஈன்றாள்.

மரியாள் பிறந்த நாள் முதல் அவளை 'கடவுளுக்கானவள்' எனும் அர்ப்பணிப் போடு வளர்த்து வந்தனர் பெற்றோர். அவளுக்கு இரண்டு வயதாகும்போதே ஆலயத்தில் அர்ப்பணிக்க விரும்பினர், ஆனால் மூன்று வயதில்தான் அதற்கு அனுமதி என குருக்கள் தடுத்ததால் மூன்று வயது வரை காத்திருந்தனர். மரியாவுக்கு மூன்று வயதான போது அவளை ஆலயத்தில் அர்ப்பணித்தனர். மரியா அழவில்லை. பெற்றோருடன் திரும்பிச் செல்லவேண்டுமென விரும்ப வில்லை. அப்படியே ஆலயத்தில் அமர்ந்து விட்டார். அதைக்கண்ட பெற்றோரும், குருவும் வியந்து போனார்கள். இவள் உண்மையிலேயே கடவுளின் அருள் பெற்றவர்தான் என அவர்கள் மனதுக்குள் குறித்துக் கொண்டார்கள்.

மரியா ஆலயத்தில் வளர்ந்தார். அங்கே எபிரேய எழுத்துகளை வாசிக்கவும், எழுதவும் கற்றுக் கொண்டார். பழைய ஏற்பட்டு நூல்களை வாசிப்பதிலும், திருச்சட்ட நூல்களைப் புரிந்து கொள்வதிலும் அதிக ஆர்வம் காட்டினார். தனது நேரத்தையெல்லாம் செபிப்ப திலும், தியானிப்பதிலும், பாடல்கள் பாடுவதிலும் செலவிட்டார். நல்ல கைவினைப் பொருட்களைச் செய்வதி லும் மரியா தனிச்சிறப்பு பெற்று விளங்கினார்.

பெண் குழந்தைகள் பதின்மூன்று வயதுக்கு மேல் ஆலயத்தில் இருக்க அனுமதிக்கப்படவில்லை. எனவே அவளைத் திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபட குருக்கள் அறிவுறுத்தினார்கள். ஆனால் மரியாவுக்கு அதில் விருப்பம் இருக்கவில்லை. ஆலயத்தில் இருக்கவே ஆர்வம் காட்டினார். ஆனால் குருக்களோ அங்குள்ள ஆண்களையெல்லாம் வரவழைத்தார்கள். எல்லோரும் ஒவ் வொரு கோலைக் கொண்டு வருமாறு பணித்தார்கள். அவர்கள் கைகளில் கோல்களுடன் ஆலயம் வந்தனர். அந்தக் கூட்டத்தில் யோசேப்பும் இருந்தார்.

அவர்களில் ஒருவரை மரியாவின் கணவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போது யோசேப்புவின் கையிலிருந்த கோலிலிருந்து ஒரு புறா தோன்றி பறந்து வந்து யோசேப்பின் தோள்களில் அமர்ந்தது. அவரே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என குருக்கள் முடிவு செய்தனர். யோசேப்போ, தனக்கு வயதாகிவிட்டது என்றும் ஏற்கனவே மகன்கள் பேத்திகள் எல்லாம் உண்டு எனவும், மரியா தனக்கு பேத்தி போன்றவள் என்றும் சொல்லி மறுக்கிறார். ஆனாலும் குருக்களின் வற்புறுத்தலால் மரியாவோடு மண ஒப்பந்தம் செய்து கொள்கிறார்.

மண ஒப்பந்தம் செய்த பின் குறைந்த பட்சம் ஒரு ஆண்டு காலம் அவர்கள் அந்த நிலையில் இருப்பது அன்றைய யூத வழக்கம். அதற்கு முன் சிறு வயதிலேயே ஒரு நிச்சயதார்த்தம் செய்யும் வழக்கமும் அவர்களிடையே இருந்தது. மண ஒப்பந்தம் என்பது யூதர்களின் வழக்கத்தில் மிகவும் முக்கியமானது. மிகவும் வலிமையானது. அவர்கள் கிட்டத்தட்ட கணவன் மனைவியைப் போலத்தான். அந்த காலகட்டத்தில் ஒப்பந்தமான ஆடவர் இறந்து போனால், அந்தப் பெண் 'கன்னி விதவை' என

அழைக்கப்படுவார்.

மண ஒப்பந்தமானபின் அதை உடைக்க முடியாது. உடைப்பதற்கு இரண்டு வழிகள்தான் உண்டு. ஒன்று, கணவன் இறக்க வேண்டும். அல்லது, விவாகரத்து கொடுக்க வேண்டும். அப்படி விவாகரத்து கொடுத்தால் கூடவே ஜீவனாம்சம் கொடுக்கவேண்டும். சுமார் 200 வெள்ளி தெனாரியம் பணத்தைப் பெண்ணுக்குக் கொடுத்துத்தான் ஒரு ஆடவன் மண முறிவு செய்ய முடியும்.

அந்த காலகட்டத்தில் பெண் தவறிழைத்தால் 'மனைவிக்குரிய' அத்தனை தண்டனைகளும் அந்தப் பெண்ணுக்குக் கொடுக்கப்படும். தவறான உறவு கொண்டதாய் குற்றம் சாட்டப்பட்டால் சட்டப்படியாக கல்லால் எறிந்து அந்தப் பெண்ணைக் கொன்று விடலாம் !

மரியாவின் இந்த மழலைக்காலக் கதைகளில் எத்தனை சதவீதம் உண்மை என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அவருடைய சிறுவயது வாழ்க்கை தூய்மையாய் இருந்திருக்கிறது என்பது மட்டும் நமக்குத் தெரியும். அதனால் தான் அவருக்கு இயேசுவைச் சுமக்கும் வாய்ப்பு கொடுக்கப்படுகிறது.

ஒருவேளை மரியாள் தூய்மையாய் இருந்ததால் அவருக்கு இயேசுவின் தாயாகும் வாய்ப்பு கிடைத்திருக்கலாம்! அல்லது இயேசுவைச் சுமக்கும் தாயாய் மாறப் போகிறார் என்பதால் அவரைத் தூய்மையாய் இறைவன் காத்திருக்கலாம்.

இந்த மண ஒப்பந்தக் காலகட்டத்தில்தான் கபிரியேல் தூதர் மரியாவுக்குக் காட்சி தருகிறார். புற நூல் ஒன்றில் மரியாள் ஆலய தொங்கு திரைகளுக்காக கருஞ்சிவப்பு மற்றும் ஊதா நிற நூல்களை நெய்து கொண்டிருந்தபோது தூதர் தோன்றினார் என குறிப்பிடப்பட்டுள்ளது. எது எப்படியோ, பதின் வயதுகளின் முதல் பாகத்திலேயே கபிரியேல் தூதர் மரியாவைச் சந்தித்து வாழ்த்துகிறார்.

'அருள் மிகப் பெற்றவரே' எனும் வார்த்தை மரியாவை இறைவனின் அருள் பெற்றவராய்க் காட்டுகிறது. ஆண்டவர் உம்முடன் இருக்கிறார் ! பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர் என தூதர் வாழ்த்துகிறார். மரியாவோ வாழ்த்து

களைக் கேட்டு கலங்குகிறார். பொதுவாக வாழ்த்துகளைக் கேட்டால் மகிழ்வது தான் உலக வழக்கம், ஆனால் மரியாள் கலங்குகிறார்.

அன்று ஏவாள், பாம்பின் வார்த்தையைக் கேட்டுக் கலங்காததால் பாவம் உலகில் நுழைந்தது. இங்கு தூதரின் வாழ்த்தைக் கேட்டு மரியாள் கலங்குகையில் மீட்பு உலகில் நுழைகிறது. மரியாளின் அச்சம்

தூதரைக் கண்டதால் வரவில்லை. தூதரின் வார்த்தைகளைக் கேட்டதால் வருகிறது. இந்த வாழ்த்து எத்தகையதோ என்றுதான் கலங்குகிறார். தமக்குத் தகுதியில்லாத அளவுக்கு ஒருவர் நம்மைப் புகழ்ந்தால் நாம் பயப்பட வேண்டும் எனும் வாழ்வியல் உண்மையும் அதில் அடங்கியிருக்கிறது.

தூதர் மரியாவிடம் மீட்பரின் வரவைப் பற்றிச் சொன்னபோது மரியாள் உடனடியாகத் தன்னை அர்ப்பணிக்கிறார். கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறார். 'நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்' என்கிறார். அடிமை என தன்னைத் தாழ்த்தியதால், அரசனைச் சுமக்கும் வரம் பெறுகிறார்.

மரியா தூய்மையாய் இருந்தார். இறைவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப் படிந்தார். தன்னை மிகவும் தாழ்த்திக் கொண்டார். இந்த மூன்று குணங்களும் மரியாவின் வாழ்க்கையிலிருந்து ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கியமான பாடங்களாகும்.

மரியாவை விட்டுத் தூதர் அகன்றதும், மரியா எலிசபெத்தைத் தேடி மலை நாட்டுக்கு ஓடுகிறார். ஆகாது என தள்ளப்பட்ட எலிசபெத்துக்கு இது ஆறாவது மாதம்! என தூதர் சொல்லியிருந்தார். தான் கடவுளைச் சுமக்கப் போகிறோம் எனும் கர்வம் மரியாவிடம் இருக்கவில்லை. தனது உறவினர் முதிர் வயதில் ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகிறாரே அவருக்கு தனது உதவி தேவைப்படுமே என நினைக்கிறார். உடனே ஓடுகிறார்.

எலிசபெத் பக்கத்து ஊரில் இருக்கவில்லை. ஹெப்ரோன் எனும் மலைநாட்டில் வாழ்ந்து வந்தார். அது நாசரேத்திலிருந்து 130 கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது ! அத்தனை தூரம் பயணப்பட்டு மரியா எலிசபெத்தைத் தேடி ஓடுகிறார். பல நாள் பயணமாக இருந்திருக்கலாம். பல இன்னல்களைச் சந்தித்திருக்கலாம். ஆனாலும் உறுதி யுடன் செல்கிறார். இந்த மனதுருக்கம் தான் இயேசுவிடமும் இருந்தது! இயேசுவைச் சுமக்கும் தகுதியாக மரியாவின் மனதுருக்கமும் இருந்தி ருக்கும் என்பதில் ஐயமில்லை.

மரியா எலிசபெத்தைக் கண்டதும் வாழ்த்துகிறார்! அவரது வாழ்த்தைக் கேட்டதும் எலிசபெத் தூய ஆவியால் ஆட்கொள்ளப்படுகிறார், வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளுகிறது! மரியா, கடவுளின் வார்த்தைக்குச் செவிமடுத்துத் தன்னை அர்ப்பணித்த கணத்திலிருந்தே இறைத் தன்மைக்கு மாறியிருப்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. அதைவிட ஆச்சரியப்படும் விதமாக எலிசபெத்தின் பதில் இருக்கிறது. 'என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?!' என எலிசபெத்தும் தன்னைத் தாழ்த்துகிறார். பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர், உமது வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! என வாழ்த்துகிறார்.

எலிசபெத்தைப் பற்றி தூதர் மரியாவிடம் சொல்கிறார் ! ஆனால் மரியாவைப் பற்றி எப்படி எலிசபெத்துக்குத் தெரிகிறது? தூய ஆவியானவர் அவருக்கு வெளிப்படுத் துகிறார்! ஆண்டவர் சொன்னவை நிறைவேறும் என நம்பிய நீர் பேறு பெற்றவர் என எலிசபெத் மரியாவை வாழ்த்துகிறார். கீழ்ப்படிதல் மரியாவிடம் அபரிமிதமாக இருந்ததை அவரது வார்த்தைகள் எடுத்துக் காட்டுகின்றன.

மரியாள் அங்கே மூன்று மாதம் தங்கியிருக்கிறார். பல விவிலிய ஆய்வாளர்கள், எலிசபெத் யோவானைப் பெற்றெடுக்கும் வரை மரியா அங்கே தங்கியிருக்கலாம் என்றும், அதன் பின் வீடு திரும்புகையில் தான் யோசேப்பு

மரியாளின் ‘தாய்மை’ நிலையை அறிந்து கொண்டிருக்கலாம் என்றும் அனுமானிக் கின்றனர்.

பொதுவாகவே நமது விசுவாசமானது, ‘நடக்க வாய்ப்புள்ள’ விஷயங்களில் ஆழமாய் இருக்கும். ஆனால் நடக்கவே வாய்ப்பில்லாத விஷயங்களில் நமக்கு விசுவாசம் இருப்பதில்லை. கையே இல்லாத ஒருவர், தனக்கு கை முளைக்கும் என நினைப்பதைப் போன்றது அது! அதே போலதான் கன்னியிடம் கரு உருவாகும் என நம்புவதும். அதிசயமாய் நிகழும் என்பதை முழுமையாய் நம்பிய மரியாளின் விசுவாசம் வியப்பூட்டுகிறது.

மரியாள் சிறுவயதிலேயே இறைவார்த் தைகளை நன்கு படித்திருக்கிறார் என்பதும், இறைவனின் இயல்புகளை அறிந்திருக்கிறார் என்பதும் அவரது பாடலின் மூலமாக வெளிப்படுகிறது. ‘மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழி மரபினரையும் என்றென்றும் இரக்கத் தோடு நினைவில் கொண்டுள்ளார்; தம் ஊழியராகிய இஸ்ரயேலுக்குத் துணையாக இருந்து வருகிறார்’ என பாடுகிறார் மரியாள்.

தூயவர் என்பதே அவரது பெயர். அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார்; உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்; தாழ்நிலையில் இருப்போரை உயர்த்து கிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார்; செல்வரை வெறுங்கை யராய் அனுப்பிவிடுகிறார். எனும் மரியாளின் பாடல், மரியாளின் இறைவனின் இயல்புகளை முழுதாய் அறிந்திருந்தார் என்பதை நமக்கு விளக்குகிறது.

அவரது இறை அறிவுதான் அவரை பக்குவப்படுத்துகிறது. அது தான் அவரை பணிவுடன் நடக்க வைக்கிறது. அது தான் அவரை சிறந்த விசுவாசம் உடையவராக மாற்றுகிறது! அவர் தியோடோக்கோஸ் அதாவது கடவுளைச் சுமந்தவர் என துவக்ககால பதிவுகளில் அழைக்கப் பட்டார்.

அவர் கன்னியாய் இருந்தார், அவர் நாசரேத்தில் இருந்தார், பெத்லேஹேமில் இயேசுவை ஈன்றெடுத்தார், தாவீதின் வழிமரபினராக இருந்தார் என எல்லாமே இறைவாக்குகளின் நிறைவேறுதலாகவே இருந்தன. இயேசுவை ஈன்றெடுத்தவுடன் அவரது பணி நிறைவு பெறவில்லை. அவரை வளர்த்துகிறார். அவரது முதல் புதுமையைத் தொடங்கி வைக்கிறார். சிலுவை அருகில் கடைசி வரை கலங்கி நிற்கிறார். உயிர்ப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொள்கிறார். திருச்சபையின் துவக்கப் புள்ளியிலும் அவர் இருக்கிறார்.

மரபுச் செய்திகளின் பதிவுகளில் மரியா இயேசுவின் மறைவுக்குப் பின் பதினோரு ஆண்டுகள் உயிருடன் இருந்ததாகவும், நற்செய்தி அறிவித்தலில் ஈடுபட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மரியாளின் கீழ்ப்படிதலும், தாழ்மையும், தூய்மையும், பொறுமையும், அன்பும், மனதுருக்கமும் எல்லாமே நமக்கான படிப்பினைகள். மரியாவை இயேசுவுக்கு மேலாய் கொண்டாடுவதும் தவறு. ஒரு சாரார் கொண்டாடுகிறார்கள் என்பதற் காக மற்றவர்கள் அவரை நிராகரிப்பதும் தவறு. கடவுளே தேர்ந்தெடுத்து நேசித்த மரியாவின் இயல்புகளை நமது வாழ்வில் ஏற்றுக்கொள்வதே சரியான அணுகுமுறையாய் இருக்கும்.

மரியாவை இயேசுவுக்கு மேலாய் கொண்டாடுவதும் தவறு. ஒரு சாரார் கொண்டாடுகிறார்கள் என்பதற்காக மற்றவர்கள் அவரை நிராகரிப்பதும் தவறு.

CHRISTMAS

Snacks

உலகில்
ஏறக்குறைய
4,74,00,000-க்கும்
மேற்பட்டவர்கள் மரியாளின்
பெயரை சேர்த்துக்
கொண்டிருக்கின்றனர். பெண்கள்
மட்டுமல்லஆண்களும் தங்கள்
பெயருடன் மரியாவின் பெயரைச்
சேர்த்துக் கொண்டிருக்
கின்றனர்.

ஏரோது
பதவிப்பித்தால் தன்
ஆட்சியை யாரும் பிடித்து
விடக்கூடாது என்று தன் சொந்த
மகன்கள் இருவரைக்
கொன்றவன். தன் மனைவிகளில்
ஒருத்தியைக் கூட கொன்றிருக்கிறான்.
" ஏரோதின் மனைவியாயிருப்பதைக்
காட்டிலும் , அவனுடைய
பன்றியாயிருப்பதே மேல்" என்று
அந்த நாட்களில் மக்கள்
கூறியிருக்கிறார்கள்

இயேசு
என்கிற இந்த பெயரை நாம்
தியானித்துக் கொண்டிருக்கும்
பொழுது, இது ஒரு சாதாரண பெயர்
என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ள
வேண்டும். இயேசு என்பது சாதாரணமாய் யூத மக்கள்
நடுவிலே கொடுக்கப்பட்ட ஒரு பெயர் யோசுவா என்றும்
இந்தப் பெயரைக் கூறலாம். யோசுவா/ யெகோவா/ இயேசு
எல்லாம் ஒரே பெயரைத்தான் குறிக்கிறது. யெகோவா என்
இரட்சகர் என்பது இந்தப் பெயரின் பொருளாகும். ஆக அநேக
யோசுவாக்கள் யூதர்கள் நடுவில் இருந்தார்கள். அநேக இயேசுக்கள்
யூதர்கள் நடுவில் இருந்தார்கள். அப்படியானால் இது ஒரு
சாதாரணப் பெயர்தான். ஆனால் கடவுளின் திட்டத்திலே அந்த
சாதரணப் பெயர் முக்கியத்துவம் பெற்றது. இதை நாம் அடிக்கடி
திருமறையிலே காண்கிறோம். சாதாரண ஒன்றை எடுத்து தம்முடைய
திட்டத்திற்கென்று, தேவன் பயன்படுத்துகிறார். தம்முடைய
குமாரனுக்கு பெயர் கொடுக்கும்பொழுது இயேசு என்கிற
சாதாரண பெயரை அவர் தெரிந்தெடுத்து தூதனின் மூலமாக
செய்தியனுப்புகிறார். இயேசு என்கிற பெயர் கொடுக்கப்பட்டது.
மத்தேயு முதல் அதிகாரம் 21வது வசனம் "அவள் ஒரு
குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று
பெயரிடுவாயாக. ஏனெனில் அவர் தம்முடைய
ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை
இரட்சிப்பார்" என்று தேவதூதன்
கூறுகிறான்.

இசையோடு பாடுவோம்

Met Mat Music School

Arr: AJKB

கர்த்தர் பிறப்புப் பண்டிகையை



பல்லவி

கர்த்தர் பிறப்புப் பண்டிகையைக்
கண்டேன் மகிழ்ச்சி கொண்டேனே.

அனுபல்லவி

அர்த்த ராவில் அருணோதயமே
அ அ ஆ! அ அ ஆ! அ அ ஆ! ஆ ஆ ஆ ஆ!

1. தெய்வ ரூபம் தெளிவாகத் தெரிந்தேன் நன்றாய் எளிதாக
உய்யும் மார்க்கம் உருவாகியதே -அ அ ஆ.
2. தந்தை வானில்; தாய் பூவில் சார்ந்த கோயில் ஓராவில்
இந்தக் குமரற் கிணை வேறிலையே - அ அ ஆ.
3. ஞானம், வளர்ச்சி, நரர் தயவு நாதன் கிருபைதனில் வளர
தானம் எனக்குத் தருவோரிவரே - அ அ ஆ.

சா. மோட்சக்கண்

சிறுகதை

பிட்டாரா பொஸ்

மெர்லின்
கண்ணனூர்

ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து துணிக்கடைகளைப் பார்ப்பதுதான் சந்திராவின் வேடிக்கை.

கடைகளில் தொங்கிக் கொண்டிருக்கிற துணிகளெல்லாம் காற்றில் அசைந்தபடி ஆடுவது.... ‘வா, வா’ என்று அவளை அழைப்பதாகவே சந்திராவுக்குத் தெரிந்தது!

School Bus -ல் போகும்போதும் வரும் போதும் அவளுக்கு இதுதான் பொழுதுபோக்கு.

பொழுதுபோக்கு என்று சொன்னால் போதாது .... அது அவளுடைய பல வருட கனவு!

.... இருக்காதா பின்ன.., அவள் புது துணி வாங்கி பல வருடங்கள் ஆயிற்றே.

ஆயினும், கடந்த கிறிஸ்மஸ்க்-கு துணி எடுத்து தரலாம் என்று அப்பா சொல்லி, இறுதியில் கடன் பிரச்சினையால் அப்பா தற்கொலை செய்ய, கிறிஸ்மஸ் அவர்கள் இல்லத்திற்கு புனித வெள்ளி போலானது.

ஏழை குடும்பம்தான் சந்திராவின் குடும்பம், அப்பா இல்லை. அம்மா சில பல வீடுகளில் பாத்திரம் தேய்த்து, சந்திராவையும், பிறந்து நான்கு வருடங்கள் ஆன ஆண் குழந்தையையும் வளர்த்து வருகிறார்கள்.

ஒரு Scholarship வழியாக ஆங்கில மீடியம் படிக்கக்கூடிய வாய்ப்பு சந்திராவுக்கு கிட்டியது. இலவசமாய் படிப்பு கிடைத்தாலும், பள்ளிக்கூட இதர செலவுகளை சமாளிக்க தாய் தடுமாறினார்கள்.

ஏழையானதாலும், அது அவளது தோற்றத்திலே தெரிந்ததாலும், பள்ளிக்

கூடத்தில் விரும்பி வந்து ஒட்டிக்கொள்ள ஒரு நண்பர்களும் அவளுக்கு இல்லை.

அவளுக்கு இருந்த மிகப்பெரிய நட்பு, தங்கள் வீட்டில் வளர்க்கப்படுகின்ற ‘முத்து’ தான், முத்து என்பது அவர்கள் வீட்டில் வளரும் ஆட்டிற்கு சந்திரா வைத்த பெயர்.

பள்ளிக்கூடம் போயிட்டு வந்தாலே, ஆட்டைப் பிடித்து விளையாடுவதும் ..., கொஞ்சுவதும்....., தன்னுடைய ஆகாரத்தை அதற்கும் ஒரு வாய் கொடுத்து சாப்பிடுவதும் என மகிழ்ந்திருப்பாள்.

படிக்கிறது 8-ம் வகுப்பு, நிறைய படிக்க இருந்தாலும், முத்துவோடு நேரம் செலவளிக்காமல் அவள் புத்தகம் திறப்பதில்லை.

முத்துவுக்கு மறக்காமல், good morning.... good night சொல்லி விடுவாள்....., ஆட்டிற்கு ‘பணம்’ என்றால் என்னவென்று தெரியாது, இல்லையெனில் முத்துவும் சந்திராவை ஒதுக்கியிருக்கும். ஆனால் முத்து சந்திராவை கண்டதும் வளைந்து.... அசைந்து... கால்களை உதைத்து.... வந்து என்னை அணைத்து விட்டுத்தான் வீட்டிற்குள் போ என்று சொல்லும்.

பள்ளிப் பேருந்தில் வரும்போது தொங்க விடப்பட்டிருக்கிற துணிகள் எல்லாம், முத்துவைப் போல சந்திராவை ‘வா, வா’ என அழைக்கக் காரணம், அம்மா இந்த ஆண்டு கிறிஸ்மஸ்க்கு புதுத்துணி வாங்கி தரலாம் என்று சொல்லியிருந்தாள். அந்த உறுதிமொழியின் சிந்தனைகளே “அவள் துணிக்கடைகளை பார்ப்பதும், அவைகள் சந்திராவை வா என்று கூப்பிடுவதும்.”

டிசம்பர் மாதம் துவங்கியதும், சந்திராவின் உற்சாகம் உயர்ந்தது, கிறிஸ்மஸ் ஆரம்பித்தாயிற்று என்பதை கடைகளில் தொங்கிய Star - களும், கிறிஸ்மஸ் தாத்தா முகமூடிகளும் சொல்லாமலே சொல்லிக் கொண்டிருந்தன. அதுவும் துணிக்கடைகளில் புதிய வரவுகள் வந்தாயிற்று என்பதை ஒவ்வொரு கடைகளும் அறிவித்தன.

“அம்மா....., என்னைக்கு நாம துணிக்கடைக்கு போவோம்.” என்று நச்சரிக்க ஆரம்பித்தாள்.

டிசம்பர் 10 -ம் தேதி தான் அப்பா வாங்கின ‘கடன்சீட்டு’ தீரும், அது முடிந்ததும் ஒரு 50,000 சீட்டுப்பணம் வாங்கி, ஒழுகும் வீட்டுக்கும் கூரை வேய்ந்து, மீதி வரதுல உனக்கும் துணி எடுத்துத் தரலாம் என்று தாய் சொன்னாள்.

தாய்க்கும் இந்த வருடம் பிள்ளைக்கு எப்படியாவது துணி எடுத்துக் கொடுக்க வேண்டும் என்னும் எண்ணம் ஆரம்பத்திலே இருந்தது.

‘வளரும் பிள்ளையல்லவா ..... எத்தனை ஆண்டுகள் ‘பழைய துணி’ போடும் அது....?’ இந்தக் கவலைதான் எப்படியாவது பிள்ளைக்கு ‘துணி’ வாங்கி கொடுக்க வேண்டும் என்று அவளை உந்தியது....., சந்திரா ஏதாவது காரியத்தில் வருத்தமாய் இருக்கும்போதெல்லாம் கிறிஸ்மஸ்க்கு dress எடுப்பதை சொல்லியே தாய் சமாளித்து விடுவாள்.

நாட்கள் நகர்ந்தன, சீட்டும் முடிந்தது ...,

‘ஒரு 50000 ரூபாய் எங்களுக்கு உடனடியாக வேண்டும், கணவரின் கடனை அடைத்தது போல நான் அதை ஒழுங்கா அடைப்பேன்’ என சந்திராவின் தாய் சீட்டுக்காரரிடம் விண்ணப்பம் வைத்தாள்.

ஏம்மா...., நீ உன் புருஷனின் கடனை அடைச்ச, உண்மைதான் ஆனா எப்போ, இது முடிய வேண்டியது ஒண்ணாம் மாசம், ...இப்போ மாசம் பன்னிரண்டு. எனக்கு எவ்வளவோ நஷ்டம் தெரியுமா? ....உன் கணவன் வாங்கின காசு ஆனதால, கிடைப்பதே மிச்சம்னு அமைதியா இருந்தேன்... அத வச்சு நீயும் கடன்

கேட்கலாம்னு நினைச்சுருக்க..., கடன் எல்லாம் தர முடியாது.

அவள் பலமுறை கெஞ்சியும் இதே பதில்தான் வந்தது.

இச்செய்தியை அறிந்த சந்திரா, முத்துவை கட்டிப்பித்தபடி அழுது கொண்டேயிருந்தாள், அன்று உணவும் சாப்பிடவில்லை, தூங்க நினைத்தாலும் அவளின் கற்பனைகளை எளிதில் கரைக்க முடியவில்லை அது மூளையில் 'பாறையாகி' இருந்தது.

அம்மாவின் ஆறுதல் வார்த்தைகளும், அடுத்த மாதம் ஏதாவது காசு வந்தா எடுக்கலாம் என்கின்ற புதிய வாக்குறுதிகளும் சந்திராவின் சோகத்தை ஆற்றவில்லை.

அம்மாவை கஷ்டப்படுத்த விரும்பாத சந்திரா. 'பாவம் அம்மாவும் எவ்வளவுதான் கஷ்டப்பட முடியும்' என்பதை உணர்ந்து கற்பனைகளை கரைக்க முயன்றாள்.

அதன் பின்பு அம்மாவிடம் துணி வேண்டும் என்று சந்திரா கேட்கா விட்டாலும், அம்மாவிற்கு சந்திராவின் வருத்தங் களைத் தெளிவாகக் காண முடிந்தது, கிறிஸ்மஸ் நெருங்க நெருங்க சந்திராவின் மனவாடல் அதிகமானதை தாய் புரிந்து கொள்ளாமலில்லை. தாயின் உள்ளம், "இரவில் இரவுக்கும் தெரியாமல் அழுதது."

அன்று, டிசம்பர் 22,.

பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்த சந்திராவை பார்த்து, தாய் சந்தோசத்தில் சொன்னாள் 'uniform எல்லாம் கழட்ட வேண்டாம். சீக்கிரம் முகம் கழுவி ரெடியாகு, துணி எடுக்க போவோம்' என்று.

'என்னம்மா சொல்ற, நம்பவே முடியலம்மா? காசு கிடைச்சா? எப்படி? .... இதோ ஒரு செகண்ட்ல வர்றேன்னு' பம்பரமாய் fresh-up ஆகி வந்தாள்.

'எங்கிருந்து காசம்மா?' என சந்திரா கேட்க..... ஷேர் ஆட்டோ வந்த அவசரத்தில் பரபரப்பாய் ஏறி துணிக்கடைக்குப் பயணம் போனார்கள்.

சந்திராவின் கற்பனை மீண்டும் முளைத்தது, இப்போது பூக்களாகியது, பூக்களின் வண்ணங்களில் ஆடைகள் துணிக்கடையில் குவிந்திருக்க., பலமணி நேரம் பல ஆடைகளை தொட்டு துழாவி, தனக்கான ஆடையை தூக்கினாள். மகிழ்ச்சி வண்ணத்துப்பூச்சிகளாய் பறந்தன, "விலையுயர்ந்த துணிகள் எடுத்தவர்கள்கூட இவளின் மகிழ்ச்சியை அவர்களின் பணத்தால் விலை கொடுத்து வாங்க முடியவில்லை."

Bill போட்டு, பணம் எல்லாம் கொடுத்து ஆட்டோக்காக wait

பண்ணுகையில், சந்திரா கேட்டாள் 'எப்படிம்மா காசு ரெடி

பண்ணின........., துணி சூப்பரா இருக்கும்மா..., இந்த கிறிஸ்மஸ்க்கு Church-ல முன் வரிசையில் உட்காரணும்மா' என்றாள்...,

'ஆமா! எப்படிம்மா காசு ரெடி பண்ணின ?...'

அதுவா... உன் முகத்த daily பார்க்கவே கஷ்டமா இருந்து..., தினமும் கடவளிடம் ஜெபம் பண்ணினேன்..., கடவுள் என் ஜெபத்தை கேட்காம இல்ல....

'இன்னைக்கு காலேல நம்ம பக்கத்து வீட்டு Aunty, அவங்க 'ஆட' வித்துருக்காங்க, கிறிஸ்மல் ஆனதுனால நல்ல விலை போச்சாம்......... அதனால.....'

'என்னம்மா சொல்ற...... அதனால...?'

'அதனால எனக்கும் நல்ல ஐடியா தோணிச்சு, நம்ம முத்துவை வித்துட்டேன்...., 4000 ரூபாய்...., 2000 ரூபாய் Advance கொடுத்தாங்க ., நாளைக்கு வந்து முத்துவ கூட்டிட்டு போவாங்க...., நல்ல லாபம் 3000 ரூபாய் தான் போகும் அது!'

ஷேர் ஆட்டோ வந்தும் ஏறாமல் கண்கள் கலங்கியபடி மனம் குழம்பியபடி.... , துணிக்கடை நோக்கி நடைபோட்டாள் சந்திரா.

தன் புத்தாடையை திரும்ப கொடுத்து காசை வாங்கினாள்.

அம்மாவை பேச விடாமல், சொன்னாள்.... 'இதா, இந்த காச கசாப்புக் கடைக்காரரிடம் திரும்ப கொடுத்துடு, முத்துவை விற்கலனு சொல்லிடு.'

ஆட்டோவின் சத்தம் தவிர இரண்டு பேரும் மௌனமாய் அமர்ந்திருந்தார்கள். இல்லம் சேர்ந்தார்கள்.

சந்திரா ஆட்டோவிலிருந்து ஓடிச் சென்று முத்துவை கட்டியணைத்து கண்ணீர் விட்டாள். அந்தக் கண்ணீரில் "துணியில்லையென்ற கவலையும் கரைந்தது."

தாய் பிள்ளையின் நற்குணத்தைக் கண்டு .... 'என் மகள் ஒரு பணக்கார பெண்மணியின் வயிற்றில் பிறந்திருந் தால்.....,' தன் வறுமையை நினைத்து மனம் கலங்கி நின்றாள்.

டிசம்பர் 25.

Church-ன் கடைசி இருக்கையில் கிறிஸ்மல் ஆராதனையில் அமர்ந்தார்கள் தாயும் மகளும்.

புத்தாடைகள் எங்கும் ஜொலித்தன, எதையும் யோசிக்காதபடி தன்னைத்தானே கட்டுப்படுத்தினாள் சந்திரா.

செய்தி வேளை வந்தது

மீட்பர் என்றால் யார்? - செய்தியின் தலைப்பு அது

இறுதி வரிகள் இப்படி ஒலித்தது.

நாம் இன்று புத்தாடையோடு இருக்க குழந்தை இயேசு கந்தை துணியை ஏற்றார்.

....

அப்போது, தாய் திரும்பி பார்க்கிறாள்.

"கசங்கிய, சாயம் போன துணியை 'முத்துவுக்காக' ஏற்றிருந்த ஒரு மீட்பரை!"

சூரிய உதயம் – சுவிசேசப் பதியம்!

மனிதக் காசுகளால்
பெத்தலேகேம் உண்டியல்
பிதுங்கி வழிந்தது!

'இடம் இல்லை!'
விடுதிகளும்
சத்திரங்களும்,
அணுகுவதற்கு முன்பே
அலறின!

மரித்தவனையும்
எழுப்பிவிடும்,
மார்கழி குளிர்!

இரவு,
நட்சத்திரப் பற்கடிப்புகளால் '
நடுங்கியது!
'தீ' க்கும் கதகதப்பு தேவை!

தம்பதிகள்
தவித்தனர்!

சிந்திக்க
அவகாசமில்லை;

தாமதிக்கும் நிமிடங்கள்
தற்கொலையின்
உச்சிப் பாறைகள்!

உயர்திணைகளின் தேசத்தில்
அஃறிணைகளின் இல்லமே,
ஆதரவானது!

மாட்டுத் தொழுவம்
மருத்துவமனையானது!

வைக்கோல் கற்றைகள்
தற்காலிக மெத்தையாகத்
தயாரானது!

காலமே,
பொறு!
உன் தோள்களுக்கு
சிறிது நேரத்தில்
சிறகு முளைத்துவிடும்!

பூமியே,
பொறு!
உன் தலைக்குவொரு
தங்க கிரீடம்
தத்தி வருகிறது!

மெல்ல... மெல்ல...
நீதியின் மூர்ச்சைதெளிய
நிலத்தில் விழுந்தது.
விண்வெளியின்
மழைத் துளி!
பூமியின் மேனி
புல்லரித்தது!

சிலுவை சித்தர்
பிஷப் : மோகன் குமார்



24 -ம் தேதிக்கான கிறிஸ்மஸ் ஆயத்த செய்தி

அந்த வார்த்தை மாமிசமாகி, கிருபையி னாலும் சத்தியத்தி னாலும் நிறைந்த வராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். (யோவன் 1:14).

கடவுள் நம்மிடம் வருகிறார்

GOD COMING TO US

Rev. Justin Devadason
Rtd District Chairman, CSI KK Diocese

முன்னுரை:

வார்த்தையானவர் மாமிசமானானார். அறிவிற்கெட்டாத கடவுள் நாம் அவரை புரிந்து கொள்ளுமளவிற்குத் தம்மை எளிமையாக்கினார். God Expressed Himself in a language that we could understand. கிறிஸ்துவின் பிறப்பு என்பது காண முடியாத கடவுளைக் காணும் வெளிப் பாடு. அதாவது சர்வ வல்லமையுடைய கடவுள் சாதாரண ஊனுடலை ஏற்று சாதாரணமானவரானார்; எங்கும் நிறைந் திருக்கும் கடவுள் கன்னி மாதாவின் வயிற்றில் தம்மை ஒடுக்கினார்; சாவாமையுடையவர் பிறப்பு, இறப்பு என்னும் மனித வரையறைக்குள் தம்மைச் சுருக்கிக்கொண்டார். அனைத்து படைப்புகளுக்கும் காரணர் ஒரு பெண்மணியினைச் சார்ந்திருக்கும் குழந்தையானார். கடவுள் மனிதனைத் தேடிவந்த நிகழ்வே, அவனுள் வாசம் பண்ண வந்த விந்தையே கிறிஸ்துவின் பிறப்பு.

விண்ணில் இருந்த வார்த்தை:

யோவான் நற்செய்தி ஆக்கியோன் திருமைந்தராகிய இயேசுவை 'வார்த்தை' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். கிரேக்க மொழியில் இதற்கு 'லோகாஸ்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. லோகாஸ் என்னும் சொல், பொருள் ஆழம் மிகுந்தது. ஞானத்தின் இருப்பிடம், ஆலோசனையின் உறைவிடம் என்றெல்லாம் இதற்கு பொருள் கொள்ளப் படுகிறது. அதாவது மனித ஞானத்திற்கும், திறனுக்கும் அப்பாற்பட்ட ஞானம். இதனையே ஏசாயா தரிசன உரையாளர் "ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர்" (ஏசா.11:2) என்று குறிப்பிடுகிறார்.

வார்த்தையானவராகிய திருமைந்தரே கடவுள் என்பதை, "அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்" என்னும் பொருட்செறிவு மிகுந்த சொற்களால் உறுதிபடுத்துகின்றார். அதாவது திருமைந்தனாகிய கிறிஸ்து திரித்துவத்தின் முதல்வராகிய கடவுளுடன் பிரிக்கமுடியாதபடி ஒன்றித்திருந்தார் (Inseparable Fellowship) என்று அப்பட்டமாய் சுட்டிக்காட்டுகிறார். இதனையே எபிரேய நிருப ஆசிரியர் "இவர் (திருமைந்தராகிய கடவுள்) அவருடைய (தந்தையாகிய கடவுளுடைய) மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவ ராயிருந்து, தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலே மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்" எபி. 1:3) என உறுதிபடுத்துகின்றார். மட்டுமின்றி அவர் படைப்பின் காரணர் என்பதை "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" என்று கூறுகிறார் (யோ.1:3). இதனடிப்படையில் ஆதியில் கடவுளிடத்திலிருந்து வெளிப்பட்ட 'வெளிச்சம் உண்டாகக்கடவது' என்ற வார்த்தையே மைந்தனாகிய கிறிஸ்து என்பதையும், அந்த வார்த்தையின் ஆற்றலே வெளிச்சமும், இதர படைப்புகளும் படைக்கப்பட காரணமாய் அமைந்தது என்பதையும் நாம் புரிந்து கொள்ளுகிறோம்

கடவுளிடமிருந்து வெளிப்பட்ட வார்த்தை சர்வ வல்லமையுடையது என்பதை படைப்புகள் உண்டாக்கப்பட்டதிலிருந்து நாம் புரிந்து கொள்ளுகிறோம். "அவர் சொல்ல ஆகும்; அவர் கட்டளையிட நிற்கும்" (சங். 33:9). சர்வ வல்லமை (Almighty) என்னும் சொல்லுக்கு பயன்படுத்தப்பட்ட எபிரேய சொல் 'ஷத்தாய்' என்பது. இதன் சரியான பொருள் தவறுகளில்லாத வல்லமை என்பதாகும். அதாவது அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலும் இருந்ததில்லை (யாக்.1:17). இச்சொல்லின் இன்னொரு பொருள் 'எனக்குப் போதுமானவர்' (All sufficient) என்பதாகும். இதற்கு தரப்பட்டுள்ள உருவகம் பாலூட்டும் அன்னையின் மார்பகம். பச்சிளங் குழந்தைகளின் அனைத்து தேவைகளுக்கும் பாலூட்டும் அன்னையின் மார்பகம் போதுமானது. பசியாறவும், அயர்ந்து தூங்கவும், பயத்தில் ஆறுதல் படுத்தப்படவும், வியாதிக்கு பரிகாரமாகவும் அமைவது போல நமது வாழ்வின் அனைத்து தேவைகளுக்கும் அவர் ஒருவரே நமக்குப் போதுமானவர்.

மண்ணில் இறங்கிய வார்த்தை

விண்ணிலிருந்த கடவுள் மண்ணிற்கு இறங்கிய ஒப்பற்ற நிகழ்வே கிறிஸ்துவின்

(FR. DAMEON)

பிறப்பு. இதனையே யோவான் நற்செய்தியாளர் “அந்த வார்த்தை மாமிசமாகியது” (யோவான் 1:14) என்று குறிப்பிடுகிறார். விண்ணையும், மண்ணையும் அவைகளில் காணப்படுகிற மற்றும் காணப்படாத ஆனால் நம்பப்படுகிற அனைத்தையும் படைத்த சர்வ வல்லமையுள்ள கடவுள் ஒரு சின்னஞ்சிறிய குழந்தையுனுள் தம்மைச் சுருக்கிக்கொண்டது நமக்கு மிக ஆச்சரியமே. ஆனால் இதுவே கடவுளின் விந்தையான அன்பு. யோவான் நற்செய்தியாளர் இதனை “தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” (யோவான் 3:16) என்கிறார்.

பவுலடிகளார் இதனை, கடவுளின் தாழ்மை என்று குறிப்பிடுகிறார். “அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷசாயலானார்” (பிலி. 2:6,7). கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டு, தீயவனின் வலையில் வீழ்ந்து பாவத்தின் வித்தைத் தன்னிடத்தே கொண்டு பாவசரீரமாயிருக்கிற மனிதனை மீட்க, கடவுளும் மனிதனானார். அனைத்து உலக காரணராகிய ஆண்டவர் மானிட சரீரமானார் (The logic of the universe became human flesh). தோற்றமும் முடிவுமில்லாத கடவுள் ஒரு புதிய தொடக்கத்தினுள் அமைந்தார் (One who had no beginning took on a new beginning). ஒருவரும் சேரக்கூடாத இடத்தில் உறைந்திருக்கும் உன்னத கடவுள் அனைவரும் தம்மை நெருங்கும் அளவில் தம்மை எளிமையாக்கினார் (The unapproachable became approachable to all).

புராண இதிகாசங்களில் தேவர்கள் மனிதரை சாபமிடுவதையும் அந்த சாபத்தால் மனிதன் நரியாக்கப்படுவதையும், பலியாக்கப் படுவதையும் நாம் கேட்டிருக்கிறோம். ஆனால் இங்கே தீயவனின் தந்திரத்தால் தேவசாயலை இழந்து தீயவனின் சாயலைக் கொண்டிருக்கிற மனிதகுலத்தை மீண்டும் தேவ சாயலாக்கிட, மனிதரின் அனைத்துப் பாவங்களையும் தம்மீது ஏற்று, தமது மரணத்தின் வழியாக பாவத்தைச் சங்கரித்து, மீண்டும் மனிதனைப் பரிசுத்தனாக்கும் இறைத்தீர்மானமே கடவுள் மனிதனான நிகழ்வு. பவுலடிகளார் கடவுளின் இத்தியாகத்தினை கடவுள் நமக்காக ‘சாபமானார்’ என்றே குறிப்பிடுகிறார். “மரத்தில் தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி,

நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலா. 3:13). மனிதனை மீட்க அவரும் மனிதனானார்.

தந்தை டேமியன் (Fr. Dameon) பெல்ஜியம் நாட்டைச்சார்ந்த கத்தோலிக்க அருட் பணியாளர். அருட்பணியில் வாஞ்சை கொண்ட இவர் ஹவாய், மலாக்கா தீவுகளில் தொழுநோயாளர்களுக்கு மருத்துவ அருட்பணிவிடைகளைச் செய்து வந்தார். தொழுநோயாளர்களுடன் மிகவும் அந்நியோன்யமாய் பணிவிடை செய்து வந்தார். ஒருநாள் காலைவேளையில் எதிர்பாராமல் கொதிநீர் இவரது காலில் கொட்டிவிட்டது. வலி தெரியாததால் இன்னமும் கொதிநீரைக் காலில் ஊற்றிச் சோதித்தார். சூடு தெரியாதபடி தசை மரத்துப் போயிருப்பதை உணர்ந்தார். தன் சரீரத்திலும் தொழுநோய் தொற்றியிருப் பதை அறிந்தார். கனத்த உள்ளத்துடன் காலைத் தொழுகை நடத்தச் சென்றார். ஒவ்வொரு நாளும் தொழுகையில் 'என் உடன் விசுவாசிகளே' (My fellow belivers) என்று ஆரம்பிக்கும் அவர் அன்றையதினம் 'என் உடன் தொழுநோயாளர்களே' (My fellow lepers) என்று ஆரம்பித்து அன்றைய தொழுகையை நடத்தினாராம். தொழு நோயாளர்களுள் ஒருவராய் தன்னை இ ை ண த் து க் கெ ா ண் ட ா ர் . தொழுநோயாளியாகவே இதர தொழு நோயாளர்களுக்குப் பணிவிடை செய்து 1889-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் தியதி தொழுநோயினாலேயே மரணமடைந்தார். பரிசுத்தராகிய நமது ஆண்டவரும், பாவத்தின் பலனான பாடுகளைச் சுமந்து கொண்டி ருக்கும் நமது பாவங்களைத் தன் மீது ஏற்றுக் கொண்டு நம்மைப் பரிசுத்தர்களாக்கி அதன் விளைவாக அவர் பாவமாக்கப்பட்டார். இதனையே பவுலடிக ளார் "நாம் அவருக்குள் தேவ நீதியாகும் படிக்கு, பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2கொரி. 5:21) என்று தெளிவுபடுத்துகிறார்.

என்னுள் உறைந்த வார்த்தை:

"....கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்" (யோவான் 1:14).

அறியப்படாத கடவுளை உலகிற்கு அறிமுகப்படுத்த கடவுள் மானிடனானார். கடவுள் எரிச்சலுள்ளவர், பயங்கரமானவர், தண்டிக்கிறவர் என்று புரிந்து கொண்டிருந்த மக்கள் இயேசுகிறிஸ்துவில் வெளிப்பட்ட தூய்மை, வாய்மை, தாழ்மை, அன்பு, இரக்கம்,

மனதுருக்கம் ஆகிய இறைப்பண்புகளைக் கண்டு அவர்பால் ஈர்க்கப்பட்டனர். கடவுளின் மகிமையினை இயேசு கிறிஸ்துவின் ஒவ்வொரு போதனையிலும், அற்புதங்களிலும் கண்டனர். ஏனெனில் அவரது செயல்கள் அனைத்துமே கிருபையினாலும், இரக்கத்தினாலும் நிரம்பி வழிவதாய் அமைந்திருந்தது.

கிருபை (Grace) என்பது இரக்கத்தின் மிகுதியினாலே தகுதியற்றவர்களையும் அதாவது தோல்வியுற்றவர்களையும் வெற்றி பெறும் தகுதிக்கானவைகளைச் செய்வது. திருமறையிலே கடவுளின் கிருபை என்பது பாவியினை மன்னித்து அவனைப் பரிசுத்தன் என அறிவிப்பது. அதாவது தண்டனைக்கு நியமிக்கப் பட்டிருப்பவனை மன்னித்து விடுதலை யாக்குவது. இயேசு கிறிஸ்து, சிலுவையில் தன்னை துன்புறுத்தியவர்களையும், அவமானப்படுத்தி அல்லல்கள் புரிந்தோரையும், மன்னிப்பு பெற தகுதியற்றவர்களையும், மன்னிப்பு வேண்ட மனமற்றவர்களையும், தனக்கு எதிராக கொடுஞ்செயல் புரிந்து கொண்டிருக்கும் போதே அவர்களை மன்னித்து அன்பு கூருவது கிருபை மட்டுமல்ல கிருபையின் பெருக்கம் என நாம் புரிந்து கொள்ளலாம். இதனையே யோவான் நற்செய்தியாளர் “அவருடைய பரிபூரணத்தினாலே கிருபையின் மேல் கிருபை பெற்றோம்” (யோவான் 1:16) என்று கூறுகிறார்.

உண்மை என்பது கடவுளின் இறைத்தன்மை. இயேசு நானே வழி, நானே சத்தியம், நானே உயிர் என்று பிரகடனப்படுத்தினார் (யோவான் 14:6). நீங்கள் பேசும்போது உண்மையினை ‘ஆம்’ என்றும் இல்லாததை ‘இல்லை’ என்றும் கூறுங்கள் என்று மனித வாழ்வின் அடித்தளத்தைத் தெளிவுபடுத்தினார் ((மத். 5:37). இதனுடைய இன்றியமையாமையினைப் புரிந்து கொண்டதாலேயே யாக்கோபு நிருப ஆக்கியோன் தமது நிருபத்தில் இயேசுவின் வார்த்தையை அவ்வாறே பயன்படுத்தியுள்ளார் (யாக். 5:12). மாறாக பிசாசின் ஆள்தத்துவத்தினைச் சுட்டிக் காட்டும்போது: “அவனிடம் உண்மை இல்லாததால் அவன் உண்மையினைச் சார்ந்து நிற்கவில்லை; அவன் பொய் பேசும்போதும் அது அவனுக்கு இயல்பாக இருக்கிறது. ஏனெனில் அவன் பொய்யன்; பொய்மையின் பிறப்பிடம் (யோ. 8:44,45) என்று உரைத்தார்.

கிறிஸ்துவின் பிறப்பு என்பது கிறிஸ்து நமது உள்ளத்தில் வாசம் பண்ண விரும்பி வந்த நிகழ்வு. கிருபையும் உண்மையும் நிறைந்தவராய் நமக்குள் வாசம்பண்ண வந்திருக்கும் அவரை ஆளுகை செய்ய நாம் அனுமதிக்கவேண்டும். அவரது இறைசாயல்கள் நமக்குள் வேர்கொள்ள வேண்டும். அவைகள் நமது வாழ்வின் தகவுகளாய் நமது சொல், செயல், சிந்தனையில் வெளிப்படவேண்டும். இரண்டாவது உலகப்போரில் குண்டுகள் போடப்பட்டதால் படுகாயமடைந்து உயிருக்காய் போராடிக்கொண்டிருந்த ஒரு மனிதன் கடவுள் எங்கே என்ற கேள்வியுடன் உதவிக்காக கதறினான். சற்று நேரத்தில் சிவந்த ஆடையணிந்த செஞ்சிலுவை சங்கத்தார் (Red Cross Society) அங்கு வந்தனர்; படுகாயமுற்று கதறிய மனிதனுக்கும், அருகில் குண்டு காயங்களால் பாதிக்கப்பட்டிருந்த இதர மனிதர்களுக்கும் முதலுதவி செய்து தங்களது வாகனங்களில் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். கொண்டு செல்லும்போது படுகாயமுற்ற மனிதனிடம் அருகிலிருந்தவர்: கடவுள் எங்கே என்று கதறினாயே! இதோ இவர்களே அவர் என்றாராம்.

நமக்குள் வாசம்பண்ண வந்திருக்கும் வார்த்தையான இயேசுநாதரின் ஆளுகையினை ஏற்று, கிருபையும் உண்மையும் நிறைந்த அவரின் தகவுகளை நம் வாழ்வில் வெளிப்படுத்தி கிறிஸ்துவின் சான்றாளர்களாக வாழ்வோம். பொருள் மிகுந்த கிறிஸ்துவின் பிறப்பு நம் அனைவருக்கும் அருளப்படுவதாக.

தலைப்புவையுங்க பரிசவெல்லுங்க

உங்கள் சிந்தனை ஓட்டத்தை அதிகப்படுத்தவே இப்போட்டி.

தலைப்பு வைக்க வேண்டிய பாடல்

சங்கீதம் 19 திருப்பாடல்கள் 19.

சிறந்த 5 தலைப்புகளுக்கு பரிசுகள்

- சங்கீதம் 19 ஐ முழுவதும் வாசித்து அதற்கு ஏற்ற சிறந்த தலைப்பை வையுங்கள்
- உதாரணம் சங் 20–ம் அதிகாரத்திற்கு, கடந்த போட்டியின் வெற்றியாளர் வைத்த தலைப்பு 'அரசனுக்கு அபயம் ஆண்டவர்'
- தலைப்புகள் 1 முதல் 5 வார்த்தைக்குள் இருக்க வேண்டும்
- ஆங்கில வார்த்தைகள் இருக்க கூடாது
- ஒருவர் ஒரு தலைப்பு மட்டுமே அனுப்ப வேண்டும்
- **20-12-23** தேதிக்குள் அனுப்பியாக வேண்டும்.
- புத்தகங்களிலிருந்தோ, இணை தலைப்பு திருமறையிலிருந்தோ தலைப்புகளை எடுக்காதிருங்கள்.
- தலைப்புகளை **+91 9486954577** என்ற எண்ணுக்கு whatsapp மூலமாகவோ அல்லது சாதாரண SMS மூலமாகவோ அனுப்பலாம்.
- அயல் நாட்டு வாசகர்களும் கலந்து கொள்ளலாம், ஆனால் தற்போது பரிசளிக்க முடியாது. ஆனால் பத்திரிகையில் அறிவிக்கப்படும்.

பொறுப்பாளர் : பாஸ்ட்டர்..... அந்த தெருவுக்கு இந்த ஆண்டு கேரல் பாட வேண்டாம்

பாஸ்ட்டர் : ஏன்? .... அங்கு கிறிஸ்தவர்கள் இல்லையா?

பொறுப்பாளர்: இல்லை பாஸ்ட்டர். ... அந்த தெருவுல அவ்வளவாய் Collection வராது

நகைச்சுவை

கடைக்காரர்: என்ன திடீர்னு இவ்வளவு ஆணி வாங்கிட்டு போறீங்க, வீடு வேலை நடக்குதா?

வாடிக்கையாளர் : ஓ அதுவா! இல்ல...... மொத்தம் நூறுக்கு மேலான Church – களிலிருந்து காலண்டர் கொடுத்திருக்காங்க அத மாட்டத்தான்.

நபர் 1: ஏங்க இவ்வளவு வயிற எக்கி பிடுக்கிறீங்க .... என்னாச்சு ?

நபர் 2: சத்தம் போடாதுங்க.... பாஸ்ட்டர் கிறிஸ்மஸ் தாத்தாவுக்க ஆள Choose பண்ணுறார்.

(சபை அறிவிப்பு வேளையில்)
சபை கணக்கர் : இந்த ஆண்டு சபை அலங்கரிப்புக்காக சுமார் 5 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது
மற்றும் பண்டிகை காலத்தில் ஏழைகளுக்கு உதவுவது நமது தலையாய கடமையாகவும் அதுவே உண்மையான கிறிஸ்து பிறப்பின் அடையாளமாகவும் இருப்பதால் சுமார் 5000 ரூபாய்க்கு ஏழைகளுக்கு பேருதவி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது

போதகர்: ஏம்மா நேற்று உங்க வீட்டுக்காரர் கிறிஸ்மஸ் ஆராதனைக்கு வரல? பொதுவா எல்லா ஆராதனையிலும் அவர் ஒழுங்கா வருபவராயிற்றே ! ! !

பெண் விசுவாசி: ஒ.... அதுவா பாஸ்டர் .... அவர் கிறிஸ்மஸ்க்கு மட்டும் சந்தோஷத்துல குடிப்பார் பாஸ்டர் ... மற்ற நாட்கள்ல தொடுறதே இல்ல பாஸ்டர், ... அவ்வளவு நல்லவர்.

பரிதாபங்கள்

நபர் 1: என்ன சகோ ....   Carol – ல பழைய பாட்டு ஒன்னும் காணோம், எல்லா பாட்டும் ஏதோ Rock music போல இருக்கு?

நபர் 2: அது ஒன்னுமில்ல கிறிஸ்மஸ் தாத்தாக்கு பழைய பாட்டு பாடினா   dance வரலியாம்.



குரங்கு:
கிறிஸ்மஸ் வந்தாலே உங்களுக்கு பெருமைதானே;
மேய்ப்பர்கள் உங்களை இயேசுவுக்கு பரிசளித்ததால்,
எந்த அலங்கரிப்பில் பார்த்தாலும் உங்கள் சொரூபமும்,
படங்களும் தான்

ஆடு:
என்ன சொல்ற தம்பி ....அது அன்று .... இன்று
கிறிஸ்மஸ் வந்தாலே அலங்கரிப்பில் அல்ல,
அடுப்புச்சட்டியில் தான் எங்களை முதலில்
வைக்கிறார்கள்... எதுக்கு கிறிஸ்மஸ்னு கவலையா
இருக்கு தம்பி

அப்பா : ஏம்மா .... Church– க்கு போன பிள்ளை அழுதுட்டே வருது .... ஏதோ விழுந்து கிழந்து தொலைச்சிருக்கும்.

அம்மா: அப்படியெல்லாம் ஒன்னுமில்ல ... உங்க மவ கருப்பா இருக்கனால நாடகத்துக்கு select பண்ணலயாம் ... என்ன பண்ணுறது இயேசப்பா வெள்ளக்காரருக்கு மட்டும் தான் பொறந்திருக்காரு போல

நபர் 1. அப்பாடா ! எனக்கு கிடச்ச வாக்குதத்தம் அருமை ... ’ துக்க நாட்கள் முடிந்து போகும்’ னு இருக்கு ... புத்தாண்டு சிறப்பா இருக்கப்போவது !

நபர் : 2 : நான் கிறிஸ்தவனான பிறகு ஜோசியம் பாக்குறத விட்டுட்டதா சொன்ன? ... இப்ப மட்டும் என்ன?

DEC 25

கிறிஸ்மஸ் அருளுரை

அடையாளம் தரப் பிறந்த குழந்தை

தி.பா. லூக். 2:1–14

Rev. Justin Devadason
Rtd District Chairman, CSI KK Diocese

இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். (லூக். 2:11,12).

முன்னுரை:

கிறிஸ்துவின் பிறப்பு 'ஒரு காலத்திலே, ஒரு ஊரிலே' என்று தொடங்கி சொல்லப்படும் புராண, இதிகாசக் கதையல்ல. கிறிஸ்துவின் பிறப்பு உலக சரித்திரத்தின் ஓர் நிகழ்வு. உலக வரலாற்றையே கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின் என்று இரண்டாகப் பிரித்த வரலாற்று நாயகரின் சரித்திரம். ஆக இன்று கிறிஸ்து பிறந்தார் என்பது வரலாற்றில் பதிவுசெய்யப்பட்டுள்ள நிகழ்வு.

தாவீதின் ஊர் என்பது யூதேயா நாட்டின் வரலாற்றில் இடம் பெற்ற பெத்லகேம் என்னும் சிறப்பு மிகுந்த செழுமை மிகுந்த ஒரு ஊர். எனவே இவைகள் அனைத்தும் வரலாற்றுப் பதிவுகளே.

கிறிஸ்துவின் பிறப்பின் நிகழ்வில் வெளிப்படுத்தப்பட்ட ஒரு அறிவிப்பு மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகிறது. அதாவது ஒரு குழந்தை துணிகளிலே சுற்றப்பட்டு முன்னணையிலே கிடத்தப் பட்டிருக்கிறது. இந்தக் குழந்தை உங்களுக்காகவே பிறந்த குழந்தை; உங்களுக்கு விடுதலை அருளப்பிறந்த குழந்தை என்று இறைத் தூதரால் அறிவிக்கப்படுகிறது. இந்தக் குழந்தை யினைக் காண ஒரு அடையாளமும் அத் தூதரால் தரப்படுகிறது. அந்த அடையாளம் என்னவெனில் மீட்பினை அருளப் பிறந்த குழந்தை துணிகளிலே

சுற்றப்பட்டு முன்னணையிலே கிடத்தப் பட்டிருக்கிறது என்பதாகும். இதில் மறைந்திருக்கும் சில உண்மைகளை சிந்தனை செய்வோம்.

இடம் மறுக்கப்பட்டோருடன் தன்னை அடையாளப்படுத்திய குழந்தை.

'சத்திரத்தில் இடமில்லாதபடியால்' என்பது துயரம் தரும் செய்தி. ஒரு குழந்தை பிறக்க விடுதியில் இடம் இல்லை என்பது விடுதியில் தங்கியிருப்போரின் மனிதாபிமானமற்ற நிலையையே சுட்டிக்காட்டுகிறது.

இன்று தாய், சேயின் ஆரோக்கியத்தினை முன்னிட்டு மருத்துவமனைகளில் மருத்துவர்களின் கவனிப்பில் குழந்தைகள் பிறக்க குடும்பத்தினரால் ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. மருத்துவ வசதியற்ற முந்திய நாட்களில் இல்லங்களில் கிராம மருத்துவச்சிகளின் ஆலோசனையுடன் இல்லத்தில் குழந்தைகள் பிறந்தன. இல்லத்தில் குழந்தைகள் பிறப்பது கண்ணியமாய் எண்ணப்பட்டது. பெற்றோர் சுற்றத்தாரின் கரிசனை இப்பிறப்புகளில் வெளிப்படுகின்றன.

அசாதாரண சூழலிலும் சில குழந்தைகள் பிறக்கின்றன. வயல்வெளிகளில் தாய்மையுற்ற பெண்கள் வேலை செய்யுமிடங்களில் குழந்தைகள் பிறந்து விடுகின்றன. பேருந்து வாகனங்களில் பயணம் செய்யும்போதும் குழந்தைகள் பிறந்துவிடும் நிகழ்வுகளைப் பத்திரிகைகள் வழியாக நாம் படிக்கிறோம். இப்படிப்பட்ட பிரதிகூலமான சூழல்களிலும் குழந்தை சுகமாய் பிறப்பதற்குரிய காரியங்கள் அசுரகதியில் செய்யப்படுகின்றன. பேருந்து ஓட்டுனர் வாகனத்தை அவசரமாய் ஓரமான நிழல் பகுதியிலே நிறுத்துகிறார்; வாகனத்தில் இருக்கும் ஆண்கள் அனைவரும் இறங்கி வெளியே நிற்கின்றனர்; துணிகளால் பேருந்தினுள்ளேயே ஒரு தற்காலிக மறைவிடம் உருவாக்கப்படுகிறது. அனுபவம் மிகுந்த பெண்கள் கரிசனையுடன் உதவிகள் செய்து ஒரு குழந்தை சுகமாய் பிறக்க இயன்ற காரியங்களைச் செய்கிறார்களே! குழந்தையின் அழுகுரல் சத்தம் கேட்டதும் ஆண்கள் உடனடியாக அருகிலுள்ள கடைகளில் சென்று இனிப்புகளை வாங்கி அறிமுகமில்லாத அனைவருடனும் பகிர்ந்து தங்கள் மகிழ்வினை வெளிப்படுத்துகின்றனரே! இக்குழந்தை பிறந்ததால் எனக்கு அலுவலகத்துக்குச் செல்ல முடியவில்லை; அவசரமான எனது பணி முடங்கிவிட்டது என்று எவரும் குறைபட்டுக்கொள்வதில்லையே. காரணம் குழந்தைப்பேறு என்பது அத்தனை கரிசனைக்குரிய நிகழ்வு.

ஆனால் சத்திரத்தில் இடமில்லை என்பது அச்சத்திரத்தில் தங்கியிருந்த எவரும் தங்கள் வசதிகளை விட்டுக்கொடுக்க மனமற்றிருந்தார்கள் என்பதைத்தானே வெளிப்படுத்துகிறது. சத்திரத்தில் இடம் மறுக்கப்பட்டதால் இல்லத்தில் பிறக்க வேண்டிய குழந்தையொன்று மாட்டுத் தொழுவத்தில் பிறக்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டது.

சத்திரத்தில் மட்டுமல்ல இயேசு கிறிஸ்துவின் வாழ்வு முழுவதிலும் இடம் மறுக்கப்பட்ட பல நிகழ்வுகள் திருமறையில் சொல்லப்பட்டுள்ளன. அவர் வளர்ந்த ஊராகிய நாசரேத்தின் ஜெப ஆலயத்தில், ஏசாயா தீர்க்கதரிசன நூலில் சொல்லப்பட்டுள்ள "அனுக்ரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்த என்னை அனுப்பினார்" என்ற செய்தியை வாசித்துவிட்டு இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று என்று அனைவரும் கேட்க இயேசு மொழிந்ததுடன், புறஜாதிமக்களுக்கு அருளப்பட்ட இறை கரிசனையையும் சுட்டிக்காட்டினார். வெகுண்டெழுந்த மக்கள் அவரை

ஜெபாலயத்திலிருந்து வெளியேற்றி உயர்ந்த மலைக்கு இழுத்துச்சென்று தள்ளிவிட முயன்றனர் (லூக்.4:16-30). சொந்த ஊரில் அவருக்கு இடமில்லை. மேலும், கதரேனருடைய நாட்டிலும் ஒரு மனிதனிலிருந்த பிசாசுகளை அவர் விரட்ட, விரட்டப்பட்ட பிசாசுகள் பன்றிகளுக்குள் புகுந்துவிட, பன்றிகள் யாவும் கடலில் வீழ்ந்து மாள, பன்றிகளின் உரிமையாளர்கள் இவர் இன்னமும் தங்கள் நாட்டில் இருந்தால் இப்படிப்பட்ட இழப்புகள் ஏற்பட்டுவிடும் என்று தங்கள் எல்லைகளை விட்டுச் செல்லும்படி அவரை வருந்திக் கேட்டுக்கொண்டார்கள் (மாற்கு 5:1-17). இடமில்லை எனும் முழக்கம் அவரது வாழ்வு முழுவதும் தொடர்ந்து கொண்டேயிருந்தது. பிலாத்துவின் முன்பாக யூத அதிகாரங்கள் 'இவனை அகற்றும், அகற்றும், சிலுவையில் அறையும்' என்று முழக்கமிட்டதும் இவ்வுலகில் வாழ உனக்கு இடமில்லை என்ற ஆதிக்க குரலின் வெளிப்பாடேயென நாம் உணர்ந்து கொள்ளலாம் (யோவான் 19:15). இதனை மனதில் கொண்டே வேதநாயகம் சாஸ்திரியார் அவர்களும் தமது பாடலில்

"ஊரில் ஓரிடமும் உகந்திட இல்லையோ?
சீர் அல்லாக் குடியில் பிறந்தார் அதிசயம் ஆனவரோ'

என்று பாடியிருக்கிறார்.

இன்று பல்வேறு நிலைகளில் உரிமை மறுக்கப்பட்டோர் ஏராளம் உண்டு. பிறக்க முடியாதபடி கருவிலே அழிக்கப்படுகின்ற சிசுக்கள், பிறந்த பின்னரும் வாழ்வு மறுக்கப்பட்ட பிள்ளைகள், பொருளாதார இயலாமையால் கல்வி கற்கும் வாய்ப்பு, வேலை வாய்ப்பு போன்றவை மறுக்கப்பட்டவர்கள், அதிகம் வேலை செய்தும் உரிய ஊதியம் மறுக்கப்பட்டவர்கள் உண்டு. இத்தகையோரை அடையாளம் காணவும், அப்படிப்பட்டவர்களுடன் உறவுகொள்ளவுமே இம்மானுவேலராகிய ஆண்டவர் சத்திரத்தில் இடமற்றவராக மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார்.

இறப்பின் வாயிலிலிருப்போருடன் தன்னை அடையாளப்படுத்திய குழந்தை:

துணிகளில் சுற்றப்பட்ட குழந்தை என்பது வித்தியாசமான, ஏன் விபரீதமான ஒரு அடையாளமாகும். நமது கலாசாரத்தில் குழந்தை பிறப்பதற்கு முன்னரே குடும்பங்களில் ஒட்டுடுப்பு என்னும் உடையினை ஆயத்தப்படுத்துவது மகிழ்வான அனுபவம். அதிலும் யூத பாரம்பரியத்தில் ஆடை என்பது மிகவும் கவனத்திற்குரியது. விருந்து இல்லங்களுக்கு செல்லும்போது தகுதியான உடையணிந்து செல்வதும், திருமண இல்லங்களுக்கு திருமண ஆடை (கலியாண வஸ்திரம்) அணிந்து செல்வதும், வழிப்போக்கர்களுக்கு இல்லங்களில் மாற்று வஸ்திரம் ஆயத்தப்படுத்தி வைத்திருப்பதும், உபவாச காலங்களிலும் துக்க நிகழ்வுகளிலும் இரட்டு ஆடை அணிவதும் அவர்களது வழக்கம். அப்படி ஆடைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் தரும் யூத கலாசாரத்தில் பிறந்த பச்சிளம் குழந்தைக்கு ஏற்ற ஆடை தரப்பட முடியாத நிலையிலே அக்குழந்தை துணிகளிலே சுற்றப்பட்டுள்ளது.

மேலும் யூத பாரம்பரியத்தில் துணிகளில் சுற்றுவது என்பது மரணத்திற்குப்பின் நல்லடக்கம் செய்யப்படும் வேளையில் நடைபெறும் ஒரு சடங்கு முறை. லாசருவின் சரீரம் துணிகளினால் சுற்றப்பட்டிருந்ததும் (யோ.11:44), இயேசுவின் சரீரம் யூதர்கள் அடக்கம்பண்ணும் முறையின்படியே

அதை சுகந்தவர்க்கங்களுடன் சீலைகளில் சுற்றிக்கட்டியதும் (யோ. 19:40) இதற்கான சான்றுகள்.

மேய்ப்பர்களுக்கு 'துணிகளில் சுற்றப்பட்டு' எனும் செய்தி என்பது புதிதானதல்ல. ஏனெனில் பாலஸ்தீனாவில் பலிக்கு நியமிக்கப்பட்ட ஆட்டு குட்டிகளைத் துணிகளில் சுற்றி கிடத்துவது அவர்களது வழக்கம். இதன் அடிப்படையிலேயே யோவான் ஸ்நாபகனும் இயேசு நாதரை "இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி" (யோ.1:29) என்னும் அடைமொழியுடன் சுட்டிக் காட்டுகிறார். இயேசுவாகிய குழந்தையைப் பணிந்து கொள்ள வந்த வானியல் ஞானியர் படைத்த வெள்ளைப்போளமும் (இறந்த சரீரத்தின்மீது வைக்கப்படும் பிசின் போன்ற பொருள்) இதைத் தானே அடையாளப் படுத்துகின்றன.

ஆக, துணிகளில் சுற்றப் பட்ட குழந்தை என்னும் அறிவிப்பு இந்த குழந்தை மரணத்திற்கு நியமிக்கப்பட்ட குழந்தை, பலிக்கு நியமிக்கப்பட்ட குழந்தை என்பதை அறிவிக்கும் செய்தியாக அமைந்திருப்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். பொதுவாக ஒரு குழந்தை பிறப்பது என்பது அந்த குழந்தை வளர்வதற்காக, வாழ்வதற்காக என்பது நியதி. ஆனால் பிறந்த பச்சிளம் குழந்தையின்மீது மரண முத்திரை பதிந்திருக்கிறது. அப்படியானால் இந்த குழந்தை பிறந்தது வாழுவதற்காக அல்ல மாறாக சாவதற்காக, உலகத்தின் மீட்புக்காகத் தன்னைப் பலியாக்குவதற்காக. இதனையே எபிரேயருக்கு எழுதிய ஆக்கியோன்

“பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்தின் அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார் “(எபி.2:14,15) என்று குறிப்பிட்டுள்ளார். ஒரு பாமாலைப் பாடலின் வரிகள்

“நீங்கள் வீணில் சாவதேன்? செத்து உங்களை மீட்டேன்,

என்று கூறி நிற்கிறார், திரும்புங்கள் என்கிறார்”

என்னும் வரிகள் இவ்வுண்மையைச் சுட்டிக்காட்டுகிறதல்லவா?

இன்று வாழ்வின் போராட்டங்களை எதிர்கொள்ள முடியாது வாழ்வை முடித்துக்கொள்ள முனைகிறவர்கள் உண்டு; பிணியின் பாதிப்பினால் நிலைகுலைந்து ஆண்டவரே போதும் என மரணத்தை நாடுகிறவர்களும் உண்டு; மரண பயத்திலே அனுதினம் மடிந்துகொண்டிருப்போரும் உண்டு. இப்படிப்பட்ட அனைவரின் விடுதலைக்காய் தம்மை அடையாளப்படுத்தி நம்மைத் திடப்படுத்த நமக்காகப் பிறந்த குழந்தையே கிறிஸ்துவாகிய குழந்தை.

இழிநிலையிலிருப்போருடன் தன்னை அடையாளப்படுத்திய குழந்தை:

“முன்னணையில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள்”. குழந்தை ஆவின் குடிலிலே தள்ளப்பட்டிருக்கிறது. இக்குழந்தை சாதாரணமான குழந்தையல்ல; தேவ குமாரனாகிய குழந்தை. வானுலகில் வாழவேண்டிய குழந்தை மண்ணுலகோருடன் தன்னை இணைத்துக்கொள்ள விரும்பி ஊனியல் சரீரம் ஏற்று குழந்தையாய் பிறந்தார். ஆனால் மானிடர் அவரை ஏற்றுக்கொள்ளாதபடியால் அவர் விலங்குகளுடன் தள்ளப்பட்டார். யோவான் நற்செய்தி ஆக்கியோன் இதனை “அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை” (யோ.1:11) என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னணையுடன் தொடர்பு கொண்டவர்கள் மேய்ப்பர்கள். இவர்கள் யூதர்களால் அருவருக்கப்படுகிறவர்கள். ஆடு மேய்ப்போர் ஆலயங்களில் ஏற்கப்படுவதில்லை; அவர்களுக்கு இல்லங்கள் இல்லாததால் ஆடுகளுடனேயே தங்கியிருந்தனர். எனவே அவர்களுக்கு திருமணம், குடும்பம் போன்ற ஆசிகள் மறுக்கப்பட்டிருந்தன. தனிமை, ஏமாற்றம், விரக்தி இவைகளே ஆயர்களின் நிரந்தர அடையாளங்கள். இப்படி இழிநிலையில் வாழ்ந்த ஆயர்களுக்கே கிறிஸ்து பிறப்பின் முதல் செய்தி அறிவிக்கப்பட்டு அவர்கள் அடையாளம் பெறுகிறார்கள்.

இயேசுவாகிய குழந்தை முன்னணையில் கிடத்தப்பட்டதால் இறைப் பிரசன்னம் கொட்டிலில் இறங்கியது. ஆவின் குடில் ஆலயமாகியது. ஆலயத்தில் அனுமதிக்கப்படாத மேய்ப்பர்கள் ஆண்டவராகிய குழந்தையினை முகமுகமாய் தரிசிக்கும் சிலாக்கியத்தினைப் பெற்றனர்; முதல் காட்சியினையும் பெற்றுக்கொண்டனர். இன்று இழிநிலையில் வாழுவோருடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளவே அவர் முன்னணையில் கிடத்தப்பட்டார்.

அடையாளமிழந்தோருக்கு அதிகாரம் அருளப்பிறந்த குழந்தை:

“இதுவே உங்களுக்கு அடையாளம்” எனும் தூதனின் அறிவிப்பு இறையியல் சிந்தனைக்கு உட்பட்டது. ஆங்கில திருமறையில் “This shall be your sign” என்று

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'Sign' என்னும் ஆங்கிலச் சொல்லை 'Signature' (கையொப்பம்) எனும் சொல்லுக்காகவும் நாம் பயன்படுத்துவதுண்டு. 'Signature' (கையொப்பம்) என்பது நமது அடையாளம் மட்டுமல்ல நமது அதிகாரமும் கூட. நாம் ஒரு கடிதம் எழுதி இறுதியாக நமது கையொப்பத்தினைப் (Signature) போட்டுவிட்டால் அந்த கடிதம் உயிர் (அதிகாரம்) பெறுகிறது. கையொப்பம் இல்லையேல் அது மதிப்பு இழந்து விடுகிறது; மொட்டைக்கடிதம் என்றே குப்பையில் எறியப்படுகிறது. அவ்வாறே நாம் பயன்படுத்தும் ரூபாய் நோட்டுகளிலும் ரிசர்வ் வங்கி ஆளுனரின் கையெழுத்து இல்லையேல் அது மதிப்பிழந்து வெறும் காகிதமாகவே கருதப்படும். ஆக கையொப்பம் (Signature) என்பது நமது அடையாளம், நமது அதிகாரம்.

இதுவே உங்களுக்கு அடையாளம் என்பது இதுவே உங்களுக்கு அதிகாரம் எனவும் பொருள் தருகிறது. அதாவது கிறிஸ்து எனும் குழந்தை நமது அடையாளம் (Sign), மட்டுமல்ல நமது அதிகாரம் (Signature). நம்மை அதிகாரப்படுத்த பிறந்த குழந்தை. ஒவ்வொரு விண்ணப்பங்களையும் ஏறெடுக்கும் போது நிறைவாக இவைகளை இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே என்று நிறைவு செய்கிறோமே அதுவே நமது வேண்டுதல்கள் தள்ளப்படுவதில்லை என்கிற அதிகாரம் மிகுந்த நமது கையொப்பம் (Signature). கிறிஸ்துவாகிய குழந்தையினை நமது உள்ளங்களில் ஆண்டவராக ஏற்போம்; அவரது அதிகாரத்துடன் முன்செல்வோம். கிறிஸ்து பிறப்பின் மகிழ்வும் நிறைவும் நம்மனை வருடனும் நிலைத்திருப்பதாக! ஆமென்

முருகன் வீட்டில் வளர்க்கப்பட்ட ஆடு அஜ்மல் கசாப்பு கடையில் வெட்டப்பட்டு டேவிட் –ன் வீட்டில் கிறிஸ்மஸ் விருந்தானது.

பண்டிகைகள் மதவாதம் ஒழிக்கும் அருமருந்து !

புதிய ஆண்டும் பேருந்

2024 என்னும் புதிய ஆண்டுப் பயணத்தைநாம்தொடங்கஇருக்கிறோம். ஒரு பேருந்தில் ஏறி நம்முடைய பயணத்தை நாம் மேற்கொள்ளும்போது, அந்தப் பயணத்தில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பல உள்ளன. அவற்றைப் பேருந்தில் எழுதி வைத்திருப்பார்கள். அந்த விதிமுறைகள் நமது ஆன்மீக வாழ்வுக்கு எப்படிப் பொருந்தி வருகின்றன எனப்பார்க்கலாம்.

1.ஏறும் வழி, இறங்கும் வழி:

முந்தைய காலத்தில் இந்த வாசகம் அனைத்துப் பேருந்துகளிலும் இருக்கும். பலர் இதனைச் சரியாகக் கடைப்பிடிக் காததாலோ என்னவோ இப்போது இந்த வார்த்தைகள் பேருந்துகளில் பெரு ம்பாலும் இடம்பெறவில்லை. ஆனால் இது ஒரு முக்கியமான விதிமுறையாகும். ஏறும் வழியாக ஏறி, இறங்கும் வழியாக இறங்கினால் அனைவரும் வேகமாய் இறங்கவும் வேகமாய் ஏறவும் முடியும். ஆனால் இரண்டு வாசல்களிலும் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களும் முட்டி மோதிக்கொள்ளும்போது கால விரயமும், ஒருவருக்கொருவர் உரசல் களும், எரிச்சலும், கடுமையான வார்த் தைப் பரிமாற்றங்களும் ஏற்படுவதைப் பார்க்கலாம். இதுபோலவே நமது வாழ்க்கையின் சுமுகமான பயணத் துக்கும் ஏறும் வழியும் இறங்கும் வழியும் இருக்கின்றன. ஆன்மீகப் பயணத்தில் இது முதலும் முக்கியமுமான செய்தியாகும்.

இயேசுகிறிஸ்து சொன்னார்: ‘நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்’ (யோவா.10:9). இயேசுகிறிஸ்து என்னும் வாசலைக் கண்டுகொண் டவர்கள் சமாதானமான வாழ்வைப் பெறுவர். நிம்மதியான வாழ்க்கை என்பது ஏதோ ஒரு உலகப்பொருள் இருப்பதால் நமக்கு வருவதல்ல. அது இயேசு மாத்திரமே தருவது. நிம்மதியான வாழ்வு இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை என்றால் நாம் இன்னும் கிறிஸ்து என்னும் வாசலைக் கண்டறிந்து அதன் வழியாய் நுழையவில்லை என்பதே உண்மை.

மேலும் நமது வாழ்க்கைப் பயணத்தின் முடிவில் நாம் இறங்கும்

ப் ப ய ண மு ம்

ஜான் டேனியல்
கொற்றியோடு

இடத்தைச் சரியாகச் சென்றடைய நமக்கு இறங்கும் வாசலாய் இருப்பவரும் இயேசுவே. ‘இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்’ (மத்.28:20). என்று இயேசுகிறிஸ்து சொன்னார். இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு இயேசு எப்போதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்று முடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார் (எபிரே.7:25). எத்தனை பெரிய பாக்கியம் இது! வாழ்க்கைப் பயணத்தின் இறுதியிலே, சரியான இடத்துக்குத்தான் வந்திருக்கிறோம் என்னும் திருப்தியோடும், மகிழ்வோடும் இந்த ஓட்டத்தை நிறைவு செய்ய நாம் இறங்கும் இடமாக இருப்பவரும் இயேசுவே! அவரோடு கூடத்தானே நித்திய காலமாய் வாழப் போகிறோம்!

2.படிக்கட்டில் பயணம் செய்யாதீர்:

படிக்கட்டுப் பயணிகளைப் பார்த்து, நடத்துனர் சொல்லிச் சொல்லி சலித்துப் போகும் வாசகம் இது: ‘உள்ளே வாருங்கள், உள்ளே வாருங்கள்’ இந்த அறிவுரையைக் கேட்காததுபோல் நிற்பவர்கள் பலர்; நடத்துனரையே முறைப்பவர்கள் சிலர்; அழைப்புக்குச் செவி சாய்ப்போர் எவருமிலர் என்றே சொல்ல வேண்டும்.

நடத்துனர் தனக்காக இந்த அறிவுரையைச் சொல்லவில்லை மாறாக பயணிகளாகிய நமது நன்மைக்காகவே சொல்கிறார். பெரும்பாலும் இளையோர்தாம் இப்படிப் படிக்கட்டில் தொங்குபவர்கள். இளையோருக்கு

வேதம் தரும் முக்கியமான அறிவுரை இது: 'பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப் படியுங்கள்' இயேசுகிறிஸ்து தாமே தமது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நமக்கு முன்மாதிரியை வைத்துப் போயிருக் கிறார். பெற்றோரும், பெரியோரும், போதகர்களும் தரும் அறிவுரைகளை ஏற்று நடவுங்கள்.

படிக்கட்டில் பயணம் செய்தால் என்னதான் நேர்ந்துவிடும்? 'படியில் பயணம் நொடியில் மரணம்' இதையும் பேருந்தில் எழுதி வைத்திருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் சொல்லியும் கேட்காமல் போனால் நாம் எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத விதத்தில் ஆபத்து

வரும். வேதம் சொல்லுகிறது: 'அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான்' (நீதி.29:1).

பெரியவர்கள் அடிக்கடி சொல்லியும் நீங்கள் இதுவரை செவிசாய்க்காமல் இருக்கிற தவறான செயல் எது என்று இந்த ஆண்டின் இறுதியில் உங்களை ஆராய்ந்து பாருங்கள். புதிய ஆண்டில் அதனை விட்டுவிடத் தீர்மானம் செய்யுங்கள். அதனை அடிக்கடி உங்களுக்கு நினைவூட்டிக் கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியரின் உதவியை நாடுங்கள். அறிவுரை சொல்பவர்களைப் பார்த்து, 'நீ சொல்லி நான் கேட்க வேண்டுமா?' என்று மனதுக்குள் முறைக்காதீர்கள். அது மிகவும் ஆபத்தான பிடிவாதம். தன் பிழையை உணராது, இதுபோன்று பிடிவாதமான பாவத்தில் துணிகரமாய் நிற்பவர்கள், ஆபத்துக்கு மிக அருகில் இருப்பவர்கள். வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு.

3.சரியான கட்டணம் செலுத்தி டிக்கட் பெற்றுக் கொள்ளவும்:

பலரும் இதனைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. வீட்டிருந்து பேருந்துக்காகப் புறப்படும்போதே, நம்மிடம் இருக்கும் சில்லரைகளை எடுத்து வைத்துக்கொண்டால் சமாதானமான பயணம் சாத்திய மாகும். நடத்துனரிடம் சண்டை போடவும் வேண்டாம், சில்லரை இல்லாமல் இரண்டுபேரைக் கூட்டணி அமைத்து இறக்கி விட்டாரென்றால் இருவரும் சேர்ந்து சில்லறைக்காகக் கடைகடையாக அலையவும் வேண்டாம்.

நடத்துனரிடம் சில்லரை இருக்கும் வாங்கிக் கொள்ளலாம் என்று நிர்விசாரமாக வந்தால் அது பொறுப்பற்ற தன்மை அல்லவா? அனைவரும் தங்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து நடந்தால் அல்லவா சண்டை சச்சரவற்ற பயணம் சாத்தியமாகும்? எனவே சட்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டும் என்னும் உண்மை இங்கே உணர்த்தப்படுகிறது.

சட்டங்களுக்குக் கட்டுப்படாத மனோபாவம் இன்று பெருகிப்போய் விட்டது. போக்குவரத்து விதிகளை மீறுவது; நான் இப்படித்தான் போவேன் நீ

ஒதுங்கிப்போ என்பது போன்ற மனோபாவம்; இரு சக்கர வாகனத்தில் மூன்று பேர் பயணம் செய்வது; அதிவேகமாய் பயணம் செய்வது; என்று இப்படி எதை எடுத்தாலும் சுய கட்டுப்பாடற்ற, ஒழுக்க விதிகளுக்கு அப்பாற்பட்டவர்களாகத் தங்களை எண்ணிக்கொள்ளுகின்ற நிலை குழப்பங் களுக்கே வழி வகுக்கும்.

அரசுச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று இயேசுகிறிஸ்து நமக்குக் கற்றுத் தந்திருக்கிறார். அவரே வரி செலுத்தினார் (மத்.17:27) என்றால் அவருடைய பிள்ளைகள் என்று பறைசாற்றிக் கொள்ளும் நாம் எவ்வளவு அதிகமாய் விதிகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்!

4.கையையும் தலையையும் வெளியே நீட்டாதீர்:

ஓர் இருக்கையில் அமர்ந்தால், அது ஜன்னல் ஓரமாக இருந்தால், கையையும் தலையையும் வெளியே நீட்டக் கூடாது. அப்படி நீட்டித் தங்கள் கைகளை இழந்தவர்கள் அநேகர். அதுபோன்றே நமது இருக்கைக்கு அருகில் இருப்பவருக்குப் போதிய இடம் தரவேண்டும்.

குறிக்கப்பட்ட எல்லைக்குள் வாழப் பழக வேண்டும். எல்லை தாண்டினால் தொல்லை வரும். பிற மனிதரின் விவகாரங்களில் தேவையில் லாமல் தலையிடுவோர், கையையும் தலையையும் வெளியே நீட்டுவோரே. இவர்கள் தொல்லைகளை விலை கொடுத்து வாங்குவார்கள்.

நீதிமொழிகள் புத்தகத்தில் ஓர் அற்புதமான, நகைச்சுவையுள்ள ஒரு வசனம் இருக்கிறது. 'பிறருடைய சச்சரவுகளில் தலையிடுகிறவர், தெருவில் செல்லும் வெறி நாயின் வாலைப் பிடித்து இழுப்பவருக்கு ஒப்பாவார்' (நீதி.26:17) சாலையில் நடந்து செல்பவர் ஒரு வெறி நாயின் வாலைப்பிடித்து இழுத்தால் என்ன ஆகும் என்று எண்ணிப் பாருங்கள். அந்த நாய் சீறிப்பாய்ந்து வரும்போது துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓடித் தப்பும் நிலைமை வராதா?

இப்படிப் பிறருடைய விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிட்டு தொல்லைப்பட்ட அனுபவம் உங்களுக்கு உண்டா? புதிய ஆண்டில் கவனமாய் இருப்போம். பிறர் விவகாரங்களில் தேவையின்றித் தலையிட வேண்டாம்.

5. துப்பாதீர்:

பேருந்தில் அமர்ந்து வெளியே துப்பினால் சாலையில் செல்லும் மனிதர் மீதும், பேருந்தில் பின்னால் அமர்ந்திருப்பவர் மீதும் எச்சில் பட்டுவிடும். அது மிகவும் சங்கடத்தை ஏற்படுத்தும் காரியம். பாதிக்கப்பட்டவர் மனத்தளவிலும் மிகவும் பாதிக்கப் படுவார். அது காலை நேரமாக இருந்தால் அந்த நாள் முழுவதிலும் பாதிக்கப்பட்ட நபர் ஒருவித அருவருப்பான மன

நிலையில் இருந்து அவதிப்படுவார். இது மிகவும் சங்கடமான காரியம். இப்படி ஒரு நிலை நமக்கு நேரிடுவதை நிச்சயமாக நாம் விரும்பமாட்டோம்.

‘மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்’ (மத்.7:12).

இயேசுகிறிஸ்து சொன்ன இந்த வார்த்தைகள் மிக எளிமையான வார்த்தைகளில் சொல்லப்பட்ட ஒரு மாபெரும் உண்மையாகும்.

இந்தப் புதிய ஆண்டில் இப்படி ஒரு தீர்மானத்தை நாம் செய்யலாமே: ‘நான் செய்யும் இந்தச் செயல் பிறருக்கு சங்கடத்தை ஏற்படுத்துமா? இதுபோன்ற செயலைப் பிறர் எனக்குச் செய்தால் நான் அதை ஏற்பேனா?’ என்பவற்றைச் சிந்தித்துப் பார்த்து எனது செயல்களை நான் அமைத்துக்கொள்வேன்.

எனது துன்பங்களுக்குப் பிறர் காரணம் கற்பிப்பதை நான் விரும்பமாட்டேன்; ஆகவே பிறரது துன்பங்களுக்கு நான் காரணம் கற்பிக்க மாட்டேன். எனது ஏதேனும் ஒரு குறையைப் பிறர் கேலி செய்வதை நான் விரும்பமாட்டேன்; ஆகவே பிறரது ஏதேனும் ஒரு குறையை நான் கேலி செய்ய மாட்டேன். என்று இப்படி வரிசையாக அடுக்கிக் கொண்டே போகலாம். எவ்வளவு இனிமையாக இருக்கும் மனித வாழ்வு என்று யோசித்துப் பாருங்கள்?

இதற்குத் தேவையான அடிப்படைப் பண்பு என்ன? பிறரிடம் அன்பு. இதுதான் முக்கியமான கட்டளைகளுள் இரண்டாவது கட்டளையாக இயேசுகிறிஸ்து போதித்த, ‘நீ உன் மீது அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக’ (மாற்.12:31) என்பது.

6.பேருந்து நின்றபின் இறங்கவும், ஓடும் பேருந்தில் ஏறாதீர்:

ஏன் பேருந்து நிற்குமுன் இறங்குகிறோம்? ஏன் பேருந்து ஓடும்போதே ஏறுகிறோம்? பொறுமையின்மை. ஏறுவதற்கும் இறங்குவதற்கும் அவசரப்பட்டு ஆபத்தில் மாட்டிக் கொள்ளக் கூடாது. இந்தப் பேருந்தை நீங்கள் விட்டுவிட்டாலும் பெரிதாய் இழப்பது ஒன்றுமில்லை. ஜீவன் அதைவிடப் பெரியது அல்லவா? எனவே பொறுமை மிகவும் தேவை.

இயேசுகிறிஸ்து சொன்னார்: ‘உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்’ (லூக்.21:19). பொறுமையினால் ஜீவன் மட்டுமல்ல ஆத்துமாவே காக்கப்படும். பொறுமையும், சாந்தகுணமும் ஒன்றோடொன்று இணைந்து செல்லும் குணங்களாகும். இயேசுகிறிஸ்து சொன்னார்:‘நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு

44 -ம் பக்கம் பார்க்க

தலைப்புவையுங்க பரிசுவெல்லுங்க

அக்டோபர் மாதம் பரிசு வென்றவர்கள்

அரசனுக்கு அபயம் ஆண்டவர்	PASTOR C. DAVIS VIRUDHUNAGAR	1
அடைக்கலம் அநுகூலம் ஆதரவு	MR. R KAMALANATHAN AVADI,CHENNAI.	2
இறைமக்கள் இறஞ்சினால், இறைவன் இறங்குவார்	PROF. TITUS EBENEZER ARIYALUR	3
ஜனங்களின் ஜெபமும் தாவீதின் ஜெயமும்	MR. PRAVIN SELVARAJ RAMANATHAPURAM	4
திறந்திருக்கும் செவிகள்	MRS. ANGELIN PRAVEENA KANYAKUMARI	5
நான் மேன்மைப்படுத்துபவர் என் வேண்டுதலை நிறைவேற்றுவார்.	MR. S.JEYARAJ TENKASI	5

அறிவோம்: சங்கீதம் 20, அரசனுடைய (தாவீதுனுடைய) வெற்றிக்காக வேண்டுதல் செய்யும் மக்களின் பாடலாகும். சங்கீதம் 20-ல், மன்றாட்டு, கடவுளின் ஆற்றல், விசுவாசம் இவைகள் பிரதானமாய் உள்ளடக்கியது.

நடுவர்களின் பரிந்துரை:

90% தலைப்புகள் சிறந்த தலைப்புகளே, அதில் சிறந்ததை தெரிவு செய்வது எங்களுக்கு கடினமாகத்தான் இருந்தது. அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

சங்கீதங்களில் இயேசுகிறிஸ்து மறைந்திருக்கிறார். தாவீது மற்றும் ஆக்கியோன்கள் அந்தப் பெயரை பயன்படுத்தாமல் மாறாக “தேவன், ஆண்டவர், கர்த்தர்” என்றே பயன்படுத்துகிறார்கள். எனவே இயேசு கிறிஸ்து என்ற பெயரை பழைய ஏற்பாட்டின் தலைப்புகளுக்கு பயன்படுத்துவதில் மிகுந்த கவனம் தேவை. சிலர் 20-ம் சங்கீதத்தில் கிறிஸ்துவின் பெயரை சேர்த்ததால் அவர்களுடைய தலைப்புகள் பரிசீலிக்கப்படவில்லை.

தலைப்புக்கான தேர்வில் “தமிழ் மொழி நடை”-யும் முக்கியம் பெற்றது

இளைப்பாறுதல் கிடைக்கும்' (மத்.11:29). இயேசுகிறிஸ்துவின் பொறுமையை சற்றே தியானித்துப் பாருங்கள், தாம் தேவ குமாரன் என்று அறிந்திருந்தபோதிலும் இயேசு, 30 ஆண்டுகாலம் தமது ஏழைப் பெற்றோருடன் ஓர் எளிய இல்லத்தில் வாழ்ந்தாரே. நம் எல்லாருக்காகவும் சிலுவையைப் பொறுமையோடு ஏற்றுக்கொண்டாரே.

அப். பவுல் தமது நிருபங்களில் பொறுமையை அதிகம் வற்புறுத்துவதைக் காணலாம். பொறுமையைப் பழகிக் கொள்வோம்.

7.செல்லுமிடம் பார்த்துப் பேருந்தில் ஏறுக:

பேருந்தில் ஒரே வாசகம் இரண்டு இடங்களில் எழுதப்பட்டிருக்கும். அவை, பேருந்தின் முன்புறத்திலும் பின்புறத் திலும் பெரிதாக எழுதப்பட்டுள்ள, பேருந்து சென்று சேரும் இடத்தின் பெயராகும். இது மிக மிக முக்கியமானது. எந்த இடத்திற்குச் செல்லவேண்டும் என்று தீர்மானிக்கிற உரிமை நமக்கு இருக்கிறது. அந்த இடத்திற்குச் செல்லும் பேருந்தில் ஏறவேண்டிய கடமையும் நமக்கு இருக்கிறது.

மனித வாழ்வு நித்தியமானது, முடிவற்றது. உலகில் வாழும்போது நாம் எடுக்கும் தீர்மானங்களே நாம் எங்கே நித்தியமாய் இருக்கப் போகிறோம் என்பதை முடிவு செய்யும். ஒன்று நித்திய மகிழ்ச்சி உள்ள பரலோகம்; மற்றொன்று நித்திய துன்பம் நிறைந்த நரகம்.

இந்த உண்மை உங்களைப் பற்றிப் பிடிக்கட்டும். நித்திய காலமாய் இயேசுவோடு வாழும் வாழ்வே உங்கள் இலக்கு என்றால் இயேசுகிறிஸ்து என்ற பெயர்ப் பலகையைப் பார்த்து ஏறுங்கள். இயேசுகிறிஸ்துவைப் பிதாவாகிய தேவன் இந்தப் பூவுலகிற்கு அனுப்பியதே அதற்காகத்தான்.

'தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசுகிறிஸ்துவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்' (யோவா.3:16).

வாருங்கள்! சரியான வாகனத்தில் ஏறி, சரியான தடத்தில் பயணத்தை மேற்கொள்வோம்! சரியான இடத்திற்கு இயேசுவே நம்மை அழைத்துச் செல்வார்!

(1970--களில், அதாவது ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்னர் அருள்திரு. ஜேம்ஸ் நதானியேல் போதகர் அவர்கள் மேற்கண்ட பொருளைக் கருவாகக் கொண்ட செய்தியைப் பகிர்ந்துகொண்ட போது அதனை கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதனையே இங்கே பகிர்ந்து கொண்டுள்ளேன்)

இதுவரை வெளிவந்த அனைத்து விதைகள் பத்திரிகைகளை டெலிகிராம் [telegram] பயன்பாட்டை [app] பயன்படுத்தி பதிவிறக்கம் [download] செய்து கொள்ளுங்கள்.



இணைய வேண்டிய வழி :https://t.me/vithaigalmagazine (or)

உங்கள் அலைபேசியில் டெலிகிராம் (telegram) பயன்பாட்டை (app) எளிதில் தரவிறக்கம் (download) செய்து கொள்ளலாம்

விதைகள் அச்சடிக்கப்பட்ட புத்தகத்தை தொடர்ந்து பெறுவதற்கான வழிகள்:

ஒரு புத்தக விலை ரூ 50
வருட சந்தா (12 புத்தகங்கள்) விலை ரூ 600
அஞ்சல் செலவு உட்பட.

குறிப்பு:
விரைவு அஞ்சல் அல்லது ரெஜிஸ்ட்ரேட் அஞ்சல் வழியாக நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் ஒரு புத்தகத்திற்கு 50 + 43 = 93 ரூபாயும், வருட சந்தாவிற்கு 600 + 516 =1116 ரூபாயும் செலுத்தவும். இந்த வழியில் தாமதம் மற்றும் அஞ்சலக தவறிழைப்பால் புத்தகம் கிடைக்கப் பெறாத சூழல் முற்றும் தவிர்க்கப்படும்.

பணம் செலுத்தும் வழிமுறைகள்:

QR CODE

GOOGLE PAY : 9486954577

Account details
Account Number: 0480053000011726
IFSC: SIBL0000480
Account Name: MERLIN S
Branch Name : MARTHANDAM
Bank Name: South Indian Bank

பணம் அனுப்பிய பின்பு, பணம் அனுப்பின விவரம் மற்றும் உங்கள் முகவரி (அலை பேசி எண்ணுடன்) +918668047378 என்ற இந்த எண்ணுக்கு ***whatsapp*** வழியாக ***SMS*** அனுப்புங்கள்.

சந்தோஷப் பாடலோடு!

98-ம் சங்கீதம்

அருள்திரு. இன்ப்ராஜ்
தமிழ் மெதடிஸ்ட் சபை, ஜெய்ப்பூர்.

கிறிஸ்து பிறப்புக் காலங்களில், அனைவராலும் அதிகம் விரும்பிப் பாடும் பாடல்களில் ஒன்று

Joy to the world, the Lord is come
Let Earth receive her King
Let every heart prepare Him room
And Heaven and nature sing
And Heaven and nature sing
And Heaven, and Heaven, and nature sing....

என்ற பாடலை ஐசக் வாட்ஸ் என்பவர், இந்த 98-ம் சங்கீதத்தை அடிப்படையாக வைத்தே எழுதியுள்ளார்

சங்கீதம் 98 (சங்கீதம் 47, 93, 95, 96, 97, 98, 99) இப்பாடல்கள் "யாவேயின் 'அரச மாண்பு பாடல்கள்' என்றும், 'சிங்காசனப் பாடல்கள்' என்றும் அழைப்பார்".

கடைசி கால கண்ணோக்கில் இப்பாடல்கள் "இயேசு கிறிஸ்து (மெசியா)வின் தலைமையை" குறிப்பதாகவும் அமைகிறது. இப்பாடல் ஏசாயா 40 - 55 அதிகாரங்களோடு நெருங்கிய தொடர்புடையதாகவும் அமைகிறது.

98-ம் சங்கீதத்தின் தலைப்பானது "புகழ்ப்பா" (mizmor [Hebrew]) என்று மட்டுமே வருகிறது, யாருடைய புகழ்ப்பா என்று இல்லை(இந்த தலைப்பை திருவிவிலியத்தில் நீங்கள் பார்க்க முடியும்). எனவே இதை (Talmud) தால்முட் ஒரு "அனாதை புகழ் பாடல்" (The orphen

Mizmor) என்று சொல்கிறது. (தால்முட் என்பது யூதர்களின் மத ஒழுங்குகளை உள்ளடக்கிய புத்தகம்). ஆனால் கிரேக்க மொழி பெயர்ப்பில் "தாவீதின் புகழ்ப்பா" என்றே உள்ளது

98 -ம் சங்கீதம் மற்றும் 96-ம் சங்கீதத்தின் துவக்கம் மற்றும் முடிவும் ஒன்று போலவே இருக்கிறது! 98-ம் சங்கீதம் பாபிலோனிய சிறையிருப்புக்குப் பிறகு அல்லது இஸ்ரயேல் மக்கள் நாடு திரும்பிய பிறகு எழுதப்பட்டிருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது

இச்சங்கிதம்3பகுதிகளாக(சரணங்களாக) பிரிக்கப்பட்டு உள்ளது

வசனம் 1 – 3

வசனம் 4 – 6

வசனம் 7 – 9.

வசனம் 1—6.

சுருக்கம்: ஆண்டவருக்கு புதியதொரு பாடல் பாடுங்கள். ஏனெனில் அவர் அதிசயமான காரியங்களை செய்து இருக்கிறார். அவருடைய வலது கரமும் பரிசுத்த புயமும் (வெற்றியை) இரட்சிப்பை உண்டாக்கியுள்ளது. பிற இனத்தார் கண்முன்னே தம் நீதியை வெளிப்படுத்தியுள்ளார். உலகெங்கும் உள்ள அனைவரும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியே விடுதலையை கண்டனர்.

ஒரு பாடல் எப்பொழுது எழுமெனில் "சந்தோசத்தில், மகிழ்ச்சியில், வெற்றியில், சோகத்தில், கண்ணீரில், பாரத்தில், விடுதலையில், நெருக்கத்தில், அமைதி யில், எதிர்பார்ப்பில்" ஆகும். இந்நேரத்தில் எழும் உள்ளத்தின் எண்ணங்களே பாடலாக மாறுகிறது. இந்த 98-ம் சங்கீதத்தில், இயேசு கிறிஸ்துவின் பிறப்பையும்(வருகை); கிறிஸ்து பிறப்பு பற்றிய தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலையும் (மீகா 5:2), கிறிஸ்து நீதியை வெளிப்படுத்துவதையும் (ஏசா 11:4 -9), நொறுங்குண்டவர்களுக்கு, சிறைப்பட்டவர்களுக்கு கிறிஸ்து அளிக்கும் விடுதலை மற்றும் வாழ்வை தருவதையும் (ஏசா 61:1-11 & லூக் 4:18 -21); இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தை (ஏசா 9:1-2) காண கிறிஸ்து வந்ததையும், துன்புறும் ஆண்டவராக இயேசு கிறிஸ்து நமக்காக புறக்கணிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, சிறுமைபடுத்தப்பட்டு, தண்டிக்கப்பட்டு, சிலுவையில் கொல்லப்பட்டதையும் (ஏசா 53), இயேசுவின் இரத்தம் சிந்துதல் வழியே உலகத்தின் பாவத்தை சுத்திகரித்ததையும் (I யோவான் 1:7b) நம்மை கிறிஸ்து நீதிமான்களிக்கு கிறதையும் (ரோமர் 5:9), சமாதானத்தை, ஒப்புரவை உண்டாக்குகிறதையும் (கொலோ 1:20, எபே 2:16) மீட்பை அருளியதையும், அவரின் அதிசயமான காரியங்களை நினைத்தும், நாம் புதிய பாடலை பாட சங்கீதக்காரன் அழைக்கிறார்

Adam Clark (ஆடம் கிளார்க்) என்ற இறையிலாளர், இச்சங்கீதத்தை அன்னை மரியாவின் பாடலுடன் (லூக் 1:46 - 55) ஒப்பிட்டு வர்ணிக்கிறார்.

வச 1: ஆண்டவருக்கு புதுப்பாட்டைப் பாடுங்கள்

அ.ம.பாடல்: என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது ..... தேவனில் களிகூறுகிறது (லூக் 1:46,47)

வச 1: அவர் அதிசயங்களை செய்திருக்கிறார்

அ.ம.பாடல்: தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்... மகிமையானவைகளை எனக்கு செய்தார் (லூக் 1:48,49)

வச 1: அவருடைய வலதுகரமும்,

அவருடைய பரிசுத்த புயமும் இரட்சிப்பை உண்டாக்கினது.

அ.ம.பாடல்: தம்முடைய புயத்தினாலே இருதய சிந்தையில் அகந்தையுள்ள வர்களை சிதறடித்தார்; தாழ்மையுள் ளவர்களை உயர்த்தினார்; பசியுள்ள வர்களை நன்மையினால் நிரப்பினார். (லூக் 1:51-53)

வச 3: அவர் இஸ்ரவேல் குடும்பத்துக் காகத் தமது கிருபையையும் உண்மை யையும் நினைவு கூர்ந்தார்

அ.ம.பாடல்: தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார். (லூக் 1:55)

ஆண்டவர் நம் வாழ்வில் புதிதாக ஒன்றைச் செய்யும் போது அல்லது அவருடைய அருளை, இரக்கத்தை, ஆசியை, பெறும்போது அந்த அனுபவமே பாடலாக மாறுகிறது.

நம்முடைய வாழ்விலும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இடையீட்டை உணரும் பட்சத்தில், ஒவ்வொரு நாளும் ஓர் புதிய பாடலைப் பாட முடியும். கிறிஸ்து பிறப்பு நாளில் மட்டும் பாடும் பாட்டாக இல்லாமல் அனுதின பாடலாக அமைய வேண்டும். அப்பாடலை ஆனந்தமாய், கெம்பீரமாய், கீத சந்தத்தோடு பாட சங்கீதக்காரன் விசுவாசத்தோடு நம்மை அழைக்கிறார்.

வசனம் 7 – 9

இவ்வுலகம் இயற்கையால் நிறைந்து ள்ளது. இயற்கை இவ்வுலகத்தை தாங்கி பிடித்து கொண்டிருக் கிறது. கடவுளின் படைப்புகளாகிய இயற்கை மற்றும் மனிதர்களாகிய நாம் அமைதி, பாதுகாப்பு, சமாதானம் ஆகிய அறநிலை குணங்களை படைப்புகளோடு இணைந்து வாழ அழைக்கப்பட்டு இருக்கிறோம்.

“இயற்கையை அழித்து கடவுளை வழிபடுவதும், மனிதர்களை வெறுத்து, பகைத்து, அழித்து இயற்கையை நேசிப்பதும்” முரணான காரியங்களே.

“அவர் பூமியை நியாயந்தீர்க்க” வருகிறார் என்பது முழு படைப்பையும் உள்ளடக்கிய ஒன்றே என்பதை மறவாதிருப்போம்.

அவருடைய வருகை மனிதர்களுக்காய் மட்டுமல்ல, அனைத்துலக படைப்பு களுக்கும் சேர்ந்ததே! (ரோமர் 8:19-22). **அழிப்பதற்காக அல்ல, மீட்புக்காக அவர் வருகிறார்.** “அவர் வருகிறார்” என்பது “அவர் வந்து விட்டார்” என்ற பொருளிலும் அல்லது கடைசி காலத்தில் “அவர் வருவார்” என்ற பொருளிலும் அமையும்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் விண்ணும், மண்ணும் இணைந்தது. (கடவுள் (இயேசு), வானத்தூதுவர், நட்சத்திரம், குளிர்காலம், மாட்டுத் தொழுவம், ஆடு, மாடு, ஒட்டகம், அன்னை மரியா, யோசேப்பு, ஆட்டிடையர், வான சாஸ்திரிகள்; etc.,)

> “இயற்கையை அழித்து கடவுளை வழிபடுவதும், மனிதர்களை வெறுத்து, பகைத்து, அழித்து இயற்கையை நேசிப்பதும்” முரணான காரியங்களே.

கடல், கடல்வாழ் உயிரினங்கள், ஆறு மலைகள், பறவைகள், விலங்குகள், மரம், செடி, கொடி இவற்றை பாட சங்கீதக்காரன் அழைக்கிறார். காரணம் கடவுளின் வருகை பயத்தை அல்ல மாறாக அவைகளை பாராமரிக்க என்பதே.

கிறிஸ்து பிறப்பு [வருகை] பாடல் பயத்திலிருந்த மக்களுக்கு & இருளிலிருந்த மக்களுக்கு, வெளிச்சத் தையும், தைரியத்தையும், மகிழ்ச்சியையும், ஆரவாரத்தையும் கொடுத்தது.

இன்றைய சூழலலில் பாலஸ்தீன - இஸ்ரயேல் போர்ச்சூழல், ரஷ்யா-உக்ரைன் போர்ச்சூழல், மணிப்பூர் கலவரம், பெண்கள், சிறுவர், சிறுமிகள் பாலியல் வன்முறைகள், தீவிரவாதம், மதவாதம், ஜாதி, மொழி கலவரம். கனிமவள சுரண்டல்கள், தண்ணீர் காற்று மாசு, வெப்பமயமாதல், இவற்றிற் கிடையே இயேசு கிறிஸ்துவின் வருகையை கெம்பீரமாய், சத்தமாய், கீத வாத்தியங்களோடு சந்தோசத்தோடு பாட முடியுமா?

எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியும்... (லூக்கா 2.10) உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக (லூக்கா 2: 14) என்று சொல்லிய பாடல் வரிகளை நினைவு கூற அழைக்கப்படுகிறோம்.

கிறிஸ்து பிறப்பு (வருகை) கொண்டாட வேண்டிய ஒன்றுதான். ஆனால் இயேசு கிறிஸ்து ஏன் இவ்வுலகத்திற்கு வந்தார் என்கிற உண்மையை உணரும் பட்சத்தில், செயல்படும் பட்சத்தில், இயற்கையோடு நாம் கெம்பீரமாய் விசுவாசத்தோடு மகிழ்ச்சியாய் பாட, அவரின் நீதியை செயல் வடிவம் கொடுத்து வாழ்வோம்

“கிறிஸ்மஸ் பாடல் வழியாய் இயேசுவை காட்ட அல்ல; மாறாக நம் வாழ்வின் அனுபவங்களின் வழியே இயேசுவை காட்டுவது!”

சிந்தனைக்கு:

Carol round என்ற பெயரில் காணிக்கை [வசூல் வேட்டை] கடவுளுக்கு ஏற்புடையதா....? [எதற்கு/யாருக்கு அப்பணம் செலவிடப்படுகிறது?]

Christmas Carol Concert பிரமாண்டமான Christmas கலைநிகழ்ச்சிகள், ஆடம்பரங்கள், தோரணைகள் .... யாருக்காக?

- திருச்சபையின் வளர்ச்சிக்காகவா?

- திருச்சபைகளுக் கிடையேயுள்ள போட்டி மனப்பான்மையா?

- நம் உள்ளார்ந்த மகிழ்ச்சியா ....? சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

வாசகர் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள்

கடல், கடல்வாழ் உயிரினங்கள், ஆறு மலைகள், பறவைகள், விலங்குகள், மரம், செடி, கொடி இவற்றை பாட சங்கீதக்காரன் அழைக்கிறார். காரணம் கடவுளின் வருகை பயத்தை அல்ல மாறாக அவைகளை பாராமரிக்க என்பதே.

கிறிஸ்து பிறப்பில் தூ - த - ர் - க - ள்

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை உலகிற்கு அறிவித்ததில் தூதர்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. தேவதூதன் என்ற சொல்லுக்குப் "பரலோகத்திலிருந்து செய்தி கொண்டு வரும் செய்தியாளன்" என்று பொருள். இவர்கள் பரலோகத்தில் வசித்துத் தேவனை எப்போதும் துதித்துப் பாடிக் கொண்டிருப்பவர்கள். தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து செயல்படுபவர்கள்.தேவனிடத்திலிருந்து தேவனுடைய கட்டளைகளையும்; வேண்டுதல்களுக்கும் விண்ணப்பங்களுக்குமான பதில்களையும் பூலோகத்திற்குக் கொண்டு வருபவர்கள்.

தூதர்களில் இரண்டு பேரை குறித்து வேதம் குறிப்பிடுகிறது. முதலாவது காபிரியேல் தூதன்: "நற்செய்தி கொண்டு வரும் தூதன்" எனப்படுவான். மற்றொருவன் "பிரதான தூதன்" எனப்படும் மிகாவேல். இவர்களைத் தவிர கேரூபீன்கள், சேராபீன்கள், பணிவிடை தூதர்கள், பிதாவின் சேனையின் தூதர்கள் என எண்ணற்ற தூதர்கள் பரலோகத்தில் உண்டு. இவர்கள் தரிசனங்களுக்கும் தீர்க்கதரிசன கனவுகளுக்கும் விளக்கம் கொடுப்பார்கள். சோதனை நேரங்களில் மக்களைப் பலப்படுத்திப் பரிசுத்தவான்களுக்குப் பாதுகாப்பாக இருப்பார்கள். மனந்திரும்புகிறவர்கள் நிமித்தம் சந்தோசப்படுவார்கள். இரட்சிக்கப்பட்டவர்களை பரலோகத்திற்கு அழைத்துச்செல்வார்கள். இவர்களுக்கு மரணம் இல்லை. திருமணமும் இல்லை.

சில சமயங்களில் தூதர்கள் மனித வடிவில் குறிப்பாக இளைஞர் வடிவில் பூமிக்கு வருவது உண்டு.

காபிரியேல் என்னும் தூதன் தானியேலின் ஜெபத்திற்குப் பதில் அளிக்கவும், யோவானின் பிறப்பை தெரிவிக்கவும். இயேசு கிறிஸ்துவின் பிறப்பை முன் அறிவிக்கவும் உலகத்திற்கு வந்தான் எனத் தானியேலின் புத்தகத்திலும் லூக்கா சுவிசேஷத்திலும் வாசிக்கிறோம். இவன் தன் பணியைச் சிறப்பாகச் செய்தான்.

பரலோகத்தில் திரளான தூதர்கள் உண்டு. அவர்களில் ஒருவன் மேய்ப்பர்களுக்குக் கிறிஸ்துவின் பிறப்பை அறிவித்து அவர் தாவீதின் ஊரில் பிறந்திருப்பதைக் கூறி, 'பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தி இருக்கக் காண்பீர்கள். என குழந்தைக்கு அடையாளத்தையும் கூறினான்.

அவனைத் தொடர்ந்து பரத்தின் சேனைகளான தூதர்கள் ‘உன்னதத்திலே தேவனுக்கு மகிமை பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக’ என்று பாடி தேவனைத் துதித்தார்கள்

மரியாள் கர்ப்பவதியானதைக் கண்டு அவளுக்கு நியமிக்கப்பட்ட யோசேப்பு அவளை ரகசியமாகத் தள்ளிவிட மனதாயிருந்தான். அப்போது ஒரு தூதன் அவன் சொப்பனத்தில் தோன்றி ‘தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, மரியாளை சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே. அவளி டத்தில் உண்டாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கு இயேசு என்று பெயரிடுவாயாக’ என்று யோசேப்பின் ஐயத்தைத் தீர்த்தான்.

ஏரோது ராஜா சாஸ்திரிகள் மூலம் இயேசு பிறந்த இடத்தை அறிந்து அவரைக் கொலை செய்யத் திட்டமிட்டு சாஸ்திரிகளிடம் இயேசு பிறந்த இடத்திற்குச் சென்று காணிக்கை கொடுத்து விட்டு அவனிடம் வந்து அந்த இடத்தைக் கூறும்படி கூறினான். குழந்தையை தரிசித்த சாஸ்திரிகளிடம் தேவதூதன் ஏரோது பிள்ளையைக் கொலை செய்வான் எனவே வந்த வழியே திரும்பிப் போக வேண்டாம் என எச்சரித்தான்.

சாஸ்திரிகள் ஏரோதின் கட்டளையின்படி நடக்காததைக் கண்ட ஏரோது இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளைக் கொல்ல திட்டமிடுவான் என்று அறிந்த தேவதூதன்

யோசேப்பின் சொப்பனத்தில் தோன்றி பிள்ளையைத் தூக்கிக் கொண்டு எகிப்துக்குச் செல்லும்படி கட்டளை யிட்டான்.

ஏரோது இறந்தபின்னர் ஒரு தூதன் யோசேப்பின் சொப்பனத்தில் தோன்றி பிள்ளையைக் கொலை செய்யத் தேடினவர்கள் மரித்துப் போனார்கள். அதனால் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு இஸ்ரவேல் தேசத்திற்குச் செல்லும்படி கூறினான்.

ஏரோதின் மகன் அர்கெலாயு யூதேயாவில் ஆளுகை செய்வதால் அங்கு செல்ல பயந்த யோசேப்புக்கு கலிலேயாவின் நாசரேத் ஊருக்குப்போய் வாழும்படி ஒரு தேவதூதன் கூறினான். நசரேயன் என்று வேதத்தில் எழுதியது நிறைவேற இவ்வாறு கூறினான்.

இயேசுவின் பிறப்பில் உதவிய தேவதூதர்கள் அவர் இறக்கும் வரை அவருக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பணிவிடை செய்தனர். பரலோக தூதர்கள் தங்களுக்கு இட்ட பணிகளைச் செவ்வனே செய்தனர். பூலோகத்தில் வாழும் தூதர்களாகிய நம் பணி, பங்கு என்ன? சிந்திப்போம் செயல்படுவோம்.

(“குழந்தையைத் தேடி” என்ற புத்தகத்திலிருந்து எடுத்தது)

மேய்ப்பர்கள்

கிறிஸ்துவின் நாட்களில் மேய்ப்பர்கள் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள். ஓரத் தில் வைக்கப்பட்டவர்கள். தேவாலயத் திலும், ஜெபாலயத்திலும் அவர்கள் நுழையக்கூடாது. அவர்கள் தீட்டுப்பட் டவர்கள். பக்தியுள்ளவர்கள் அவர்களைத் தொடமாட்டார்கள்!. எந்த நீதிமன்றத் திலும் அவர்களுடைய சாட்சி ஏற்றுக் கொள்ளப்படாது. அவர்கள் உண்மையற் றவர்கள் மற்றும் சிறிதும் அறநெறித்தன் மையற்றவர்களென்றுகருதப்பட்டார்கள். சமுதாயத்தில் அவர்கள் கேட்ட சொற் களெல்லாம் புறக்கணிப்பின் சொற்கள் தான். அவர்கள் அனுபவித்ததெல்லாம் புறக்கணிப்பும், தள்ளிவிடப்படுதலும் தான். ஒரு லேவியரோ, ஆசாரியரோ, தீர்க்கதரிசியோ அவர்களோடு பேசியது கிடையாது. கடவுளுமே தங்களைத் தள்ளிவிட்டாரென்று அவர்கள் எண்ணி யிருக்கக்கூடும். ஆனால் கடவுள் “கிறிஸ்து பிறப்பு நற்செய்தியை” மேய்ப்பர்களுக்கு அறிவித்தார்

மூடும் முன்...

சிரமப்பட்டு வெளியிடப்படுகின்ற இப்பத்திரிகை கிறிஸ்துவை நேசிப்பவர்களின் கைகளுக்கு சென்றடைவதே எங்கள் பயணத்தின் வெற்றி.

குறைந்த பட்சம் ஒரு நபருக்காவது இந்த புத்தகத்தை அறிமுகம் செய்யுங்கள். கூடுமானால் ஒரு ஊழியமாய் எடுத்துச் செய்யுங்கள்.

இதுவரை *pdf* ஆக வெளிவந்த பத்திரிகை தற்போது அச்சு வடிவத்தில் வருவதால் பொருட்செலவு அதிகம். ஆயிரத்துக்கு அதிகமான வாசகர்கள் புத்தகம் வாங்கும் வரை, அச்சு செலவை நன்கொடைகள் இல்லாமல் பூர்த்தி செய்ய முடியாது. எனவே தொடர்ந்து தடையின்றி புத்தகம் வெளிவர புத்தக விலையைத் தாண்டியும் நன்கொடைகளால் தாங்குங்கள்.

நல்ல நிலமாகு நண்பா ஊழியத்தின் சார்பாக, சீர்காழி பகுதியில் 3 அருட்பணிக் களங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அங்கு தையல் பயிற்சி, கம்பியூட்டர் பயிற்சி, சிறிய சபை கட்டுதல் போன்ற திட்டங்கள் உள்ளன; அதற்காகவும் உதவி செய்யுங்கள்.

மேலும் ந.நி.ந ஊழியத்தின் சார்பில் விழுப்புரம் மாவட்டத்தில் ஓர் ஏழைக்கு 3 லட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான ஆயத்தமும் நடைபெறுகிறது. அப்பணியிலும் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்.

எல்லாவற்றிக்கும் மேலாக, உங்கள் ஜெபமும், ஆலோசனையும், அன்பும், துணையும் எப்போதும் எங்களுக்கு தேவை

நன்கொடை அனுப்புபவர்கள் கவனத்திற்கு

SCAN to PAY from any UPI App

Nalla Nilamagu Nanba

UPI ID: nallanilamagu@IOB

ACC NUMBER: 353701000010503.
IFSC : IOBA0003537.
MICR: 629020035.
ACC NAME: NALLA NILAMAGU NANBA MINISTRIES TRUST.
BANK: INDIAN OVERSEAS BANK.
BRANCH: VERKILAMBI.

MERRY Christmas AND HAPPY NEW YEAR